T 4740

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

Acc. no. 24048

துணர் : 59 மலர் : 3

உள்ளுறை

1. ஆந்திர நாட்டு அகநானூறு ஓர் ஒப்பாய்வு 97

டாக்டர். சரளா ராசகோபாலன்
இராணி மேரிக் கல்லூரி,
சென்னை.

2. தொல்காப்பியமும் பழந்தமிழ் மொழி வரலாறும் 130

(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர். மோ. இசரயேல்
காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

3. வீரசோழிய எழுத்திலக்கணக் கோட்பாடு 135

பி. பெ. சுயம்பு,
ஆய்வாளர்,
தமிழியற்றுறை,
காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — ஆனி மலர்: 3

ஜூன் — ஜூலை 1985

ஆந்திர நாட்டு அகநானூறு ஓர் ஒப்பாய்வு

டாக்டர் சரளா. ராசகோபாலன்,

[உருத்ரோத்காரி, சித்திரை 1983 ஏப்ரல் – மே இதழின் தொடர்ச்சி*]

குறிஞ்சி

சங்க இலக்கியத் தோழி தலைவியின் காதலைக் குறிப்பாக அறிவாள்: ஆனால் ஆந்திரநாட்டு அகநானூற்றில் தோழி அதனை அறியும் முறை சற்று வேறுபடுகிறது :

---

* இக் கட்டுரைத் தொடர்ச்சி நீண்ட இடைவெளிக்குப் பின் வெளியிடப் படுதலைப் பொழிலன்பர்கள் பொறுத்திடுக.

அ. தலைவி நான்கு புறமும் பார்த்தல், எந்தவொரு பொருள் மீதும் அவள் பார்வை நிலைக்காமை, நெட்டுயர்த்தல், வெறுமனே முறுவலித்தல், பொருளற்ற சொற்களை வலிந்து பேசுதல் ஆகிய செயல்களை வைத்துத் தலைவியின் காதல் அறியப்படுகிறது (6)

ஆ. தலைவி தன் காதலனைத் தன்னிடம் மழுப்பியதைத் தோழி சுட்டிக் காட்டி, நீ அவன் நட்பைப் பெறாதிருந்தால், பரிதியின் கதிர் தொட்டதும் மகிழ்ந்து மலரும் தாமரை போலத் தலைவன் பெயரைச் சொல்வதால் தலைவியின் முகம் மலர்தல் சுட்டிக் காட்டப்படுகிறது. (23)

இ. வழிப்போக்கன் போல் வந்த தலைவன் குடங்கையை ஏந்தி மேலே நீர் வார்க்கும் இளம் பெண்ணைப் பார்த்தவாறு வேண்டுமென்றே மிகவும் மெதுவாக நீர் பருகுகிறான். அவளும் வேண்டுமென்றே மிக மெல்லிய தாரையாக நீரூற்றிக் கொண்டிருக்கிறாள். இந்த ஊமை நாடகத்தின் உரையாடல்கள் தோழியின் உள்ளத்தில் உரக்கக் கேட்கிறது. (36)

ஈ. ஏதோ ஒரு மலர் தலைவியின் மார்பகங்களில் ஒட்டிக் கொண்டதாகத் தோழிமார் வினவ, அஃதறியாத தலைவி காதலனின் நகக் குறியைத் துடைக்கத் தொடங்கியதறிந்து தோழிமார் விலாப் புடைக்க, நகையாடுவதாகக் கூறப்படுகிறது. (37)

7. பாங்கனிடத்துத் தலைவியின் பேரழகைச் சுட்டித் தன் உள்ளம் அவள் பால் சென்றதைத் தெளிவுறுத்துவான் சங்கத் தலைவன் இதனைப் பாங்கற் கூட்டம் என்று இலக்கியம் இயம்பும். தொல். களவு. (10 : 7-9) இந்நூலில் தோழா நீ பதினாறு கலைகளும் நிரம்பி வரும் நிலவை நாள்தோறும் சென்று காண வேண்டாம். இவள் முகத்திரையை மெதுவாக விலக்கிப்பார். இவள் முகத்தில் அந்நிலவின் பொலிவு தெரியும் என்று பாங்கன் தலைவனிடம் தலைவியைத் தான் கண்ணால் நுகர்ந்ததைக் கூறுதல் புதுமையுடைத்து.

8. சங்கத் தலைவனும் தலைவியை நலம் பாராட்டுவான் இத்தலைவனோ சில புதுமைகள் செய்கிறான்.

அ. தலைவன் தலைவியை முழுமையாகக் கண்டு வருணிக்க நினைத்தும் இயலாத நிலை சுட்டப்படுகிறது. சேற்றில் வீழ்ந்த கிழமாடு எழ மாட்டாதவாறு போலத்

தலைவியின் உடலுறுப்பின் மீது அங்கங்கே படும் தலைவன் பார்வை திரும்பி வராமல் அங்கேயே அழுந்திப்போய் விடுகிறது 3, 12)

ஆ. முன்றானையால் முகத்தை மறைக்கும் அந்நாட்டு வழக்கம் சுட்டி நலம் பாராட்டப் படுகிறது கதிரவனின் கதிர்க்கைகள் முகத்தையும் தாமரை மலரையும் தொட்டுப் பார்த்து மென்மை அறிய வாய்ப்புத் தருவதற்கு முன்றானை யால் முகத்தை மறைக்காதே என்று வேண்டப்படுகிறது. (4)

இ. உலகில் எத்தனையோ அழகிய மகளிர் இருப்பினும் இவளுடம்பின் இடப்பகுதி வலப் பகுதியை முழுதும் ஒத்திருப் பதால் இவளே அனைவரினும் சிறந்த அழகி என்ற முடிவிற்கு வருகிறான் தலைவன். (7)

ஈ. இறைவன் இவளை அமுதும் நஞ்சும் சமமாகக் கலந்து படைத்து விட்டதால் தலைவனுக்குப் பிரிவில் நஞ்சாகவும் கூடலில் அமுதமாகவும் இருக்கிறாளாம் தலைவி. (15)

உ. நீரிலும் நெருப்பிலும் நின்று பல நாள் செய்த தவத்தால் பொன் அரை ஞாண் அவள் இடை தொடும் பாக்கியத்தைப் பெற்றதாம். ஆனால் தான் பெற வில்லையே என்று ஏங்குகிறான் தலைவன். (51) சங்க இலக்கிய மகளிர் தங்க அரைஞாண் கட்டியதாகத் தெரியவில்லை.

ஊ. தலைவியைக் காணாத பெண்கள்தாம் இவ்வூரில் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். உரிய நேரத்தில் உண்ணுகிறார் கள். உறங்குகிறார்கள். மற்றவர்கள் சொல்லும் சொல்லும் அவர்கள் காதில் விழுகிறது நாத்தடுமாறாமலிருக்கிறார்கள். தலைவியைக் கண்ட பெண்களோ அவள் அழகில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூடத் தங்களுக்கில்லையே என்ற ஏக்கத்தாலும் பொறாமையாலும் குமைகிறார்கள். (100) என்று பிற மகளிரோடு தலைவி ஒப்பிட்டுப் பேசப்படுகிறாள்.

எ. சங்கத்தலைவியை ஆடவர் பலர் பாராட்டுவதாகக் கூறல் மரபில்லை. இந்நூலில் தலைவியை ஊரவர் கண் கொட்டாமல் பார்த்துத் தேவராகி விட்டனராம். (76)

9. நோக்கும் இடமெல்லாம் தலைவியாகவே தோற்ற மளித்தல் இருமொழித்தலைவர்க்கும் உரியதாக உள்ளது. ஆனால் இந்நிலை தெலுங்கு மானுடத் தலைவனுக்கு ஏற்பட வில்லை. சிவபெருமானுக்கே அமைகிறது. இறைவன் அந்தி

நேர வழிபாட்டுக்காகக் கையில் ஏந்திய நீரில் உமையவளின் முகம் தெரிந்ததால் ஓதிக்கொண்டிருக்கும் மந்திரம் மறந்து நிறுத்தக்கூடாது என்பதால் தப்பும் தவறுமாக உச்சரிக்கிறாராம் (1) இந்த அகத்துறைக் கூற்றைக்கூறி அவருக்கு என் வணக்கங்கள் என்று வணக்கம் கூறும் மரபு புதியது.

10. உடல் புணர்ச்சி இருப்பினும் முத்தம் பற்றிய விளக்கங்களைச் சங்க இலக்கியம் குறிப்பாகக்கூடக் கூறுவதில்லை.

உன்முகம் நிலவு போன்றது
எயிறூறிய நீர் அமுதம் போன்றது
மின்னல் வேகத்தில் தரும் முத்தம்
எதைப்போன்றது?
உவமை சொல்ல முடியவில்லை (44)

என்று உவமை கூறமுடியா நிலையைச் சுட்டுவான் தலைவன். தலைவியினுடைய இதழ்களின் அமுதச்சுவை உலகறியாதது. அதனால் தான் தேவர்கள் பாற் கடலில் அமுதத்தைத் தேடிக் கடைந்தெடுக்கப் பாடுபட்டார்கள் என்று பெருமிதத்துடன் கூறுவான் மற்றொரு தலைவன் (65)

11. வரைவு கடாதல் நிலையிலும் சில புதுமைகள் காணப் படுகின்றன. வரைவு கடாவும் தோழியைத் தலைவி ஒருத்தி பாராட்டுவது புதுமையானது.

"தோழி நீ திறமை மிக்கவள்
இடமறிந்து காலமறிந்து
இன் சொல்லும் கடுஞ் சொல்லும் பேசும் கலையில் வல்லவள்
தலைவனின் உள்ளம் வருந்தாத வகையில்
அறிவுரை கூறித் தெருட்டும் நின்பணி
சிறப்பதாக, நீ நெடிது வாழ்க." (38)

எனத் தோழியை வாழ்த்துகிறாள் தலைவி.

அ. சங்க இலக்கியத்தில் வழி ஏதம், தலைவியின் ஆற்றாமை, இற்செறிப்பு, தினை முதிர்ச்சி, வெறியாட்டு போன்ற பல காரணங்கள் கூறி வரைவு கடாவினும் பரத்தமை கூறி வரைவு கடாதல் இல்லை. தலைவனின் உள்ளத்தில் எண்ணிறந்த பெண்கள் குடிபுகுந்து விட்டதால் தலைவி

நானிருக்க இடம் இல்லாமல் தலைவன் உள்ளத்தில் ஓரத்தில் ஒதுக்கப்பட்டுவிட்ட உணர்வால் எச்செயலும் செய்யாமல் மெலிவதைச் சுட்டிக்காட்டி வரைவு கடாவுகிறாள் தோழி (19).

ஆ. தலைவி தன் காம நிலையைத் தலைவனுக்கு நேராகவே கூறுதல் புதுமைக்குரியது. தமிழ் மரபுக்குப் புதுமை யானது. புறம்பானது.

காதல் பிணைப்பில்
ஆதரவான அரவணைப்பில் இதழருந்தும் துடிப்பில்
மெய்ம்மறந்து ஒருநிலைப்படாமல்
நான் உங்கள் வயப்படும் கிறுக்கில்
என்னை
நாணமில்லாதவள்
காதற் கலை தேர்ந்தவள் என்று
தவறாக எண்ணி விட வேண்டாம்
அவை உணர்வு வெளிப்பாடுகள் அல்ல (86)

என்று ஆந்திரத்தலைவி கூறுகிறாள்.

இ. தமிழிலக்கியத்தில் தோழிதான் வரைவு, கடாவுவாள், இவ்விலக்கியத்தில் தலைவியே தலைவனிடம் வரைவு கடாவு கிறாள். இரவுக் குறியிடை தன் ஆற்றாமையைக் கூறுகிறாள் தலைவன் வருவான் என்ற நம்பிக்கையில் முதல் யாமம் ஒரு நொடியில் கழிகிறது. தலைவன் வந்து சென்றதும் பின் யாமம் ஆண்டுகளாக நீடித்து வருத்துவதைத் தலைவி கூறுகிறாள். (27)

ஈ. இந்தக் களவின்பம் என் உயிருக்கே ஏதம் தரும் என்பது தாங்கள் அறியாததா ? என்று வழி ஏதம்கூறி வரைவு கடாவுகிறாள் தலைவி. (41)

உ. அழுத கண்ணோடும் கலக்கத்தோடும் வந்த தலைவி முறுவலித்துக் கொண்டே தலைவனிடம் கேட்கிறாள். தம் காதலின் பொருட்டுத்தலைவன் உரைத்த சூளுறவு மெய்ப்பிக்கப் படவேண்டிய காலம் வந்திருப்பதை நினைவூட்டுகிறாள். (69)

ஊ. நேரம் காலம் தெரியாமல், தலைவன் வரும்போது தலைவி கழறுகிறாள். தன் குழந்தையை உயிராகப் போற்றும் தாய் கூட, தான் குடும்ப வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அழும் குழந்தையை வைகிறாள். தக்க காலமும் சூழலும்

வாய்க்கும் வரை பொறுக்காமலிருந்தால் யாருக்குத்தான் சினம் பொங்காது (98) என்று கேட்கிறாள்.

12. இரு மொழியிலும் அறத்தோடு நிற்கும் துறை சிறப்பாக அமைகிறது.

"நான் நாணுடையவள்
அவர் காதலில் உறுதியானவர்
என் தோழிகள் நுண்ணறிவினர்
நான் காலுக்கு
எதற்காக செம்பஞ்சுக்குழம்பு தடவ வேண்டும் ? 30)

என்று குறிப்பாகவும்,

"தோழி, அவரைத் திடீரென்று பார்த்த குறுகிய பார்வையால் என் ஆசை தணியவில்லை.

"கனவில் கண்ட அருவி நீர்
வேட்கையைத் தணிக்குமா ? (34)

எனத் தோழியிடம் தன் வேட்கையை நேராகவும் கூறி அறத்தோடு நிற்கச் சொல்வாள் தலைவி.

13. சங்கத் தோழி தலைவனுக்கு அலர் அறிவுறுத்துவாள். இங்கு, தலைவன் தோழனிடம் "மிகச் சிறியதையும் மிகப் பெரியதாகப் பேசவும், ஊசியின் காதில் கதாயுதத்தைக் குத்தி இழுத்து விடும் தன்மையை அதாவது அலர் தூற்றலை நேராகவே கூறுகிறாள்.

14. தலைவனுக்குப் பாயல் உணர்த்தும் தோழியை ஐங்குறுநூறு காட்டும். இந்நூலில் தமர் தரும் தலை நாளிரவில் நிலவு முளைக்கும் வரை பொறுக்கும் படித்தோழி கூறுகிறாள். (54) திருமண நாளில் கோத்த நிலையிலுள்ள மணமக்களின் கைகள் வியர்த்தல். திருமணமான நான்காவது நாள் சடங்கன்று பிரிந்திருக்க வேண்டுமே என்பதற்காக கைகள் அழுவது போலிருக்கிறதாம். 60.

15. திருமணத்திற்குப்பின் தலைவி ஒருத்தி வளையுங் கொடி வளையாத நிலையான மரத்தைத் தழுவியது அலையும் மனத்தவளான நான் மனவுறுதி பெற்ற கணவனைத் தழுவிக் கொண்டேன். கணவனின் குழலோசைக் கேற்ப நடனமாடுவேன் என மகிழ்கிறாள். (9)

சங்க இலக்கியம் காதல் தோல்வியைச் சுட்டுவதில்லை. இவ்விலக்கியமோ அதையும் சுட்டுகிறது. தலைவியின் மெலிவிற்குக் காரணம் கேட்கும் தோழியிடம் உறுதியான உள்ளம் இல்லாத ஒருவனைக் காதலித்திருந்தால் இது உனக்குத் தெரிந்திருக்கும் என்று தோழியிடம் வெறுப்புடன் கூறுகிறாள். (186 தலைவி தன் நெஞ்சத்தைத் தலைவன் நெஞ்சத்தில் அடகு வைக்கிறாள். அவரிடமிருந்து திருப்பி எடுக்க முடியவில்லை. அதைக் கண்ட தோழி

> "இனி இப்படி ஆராயாமல் ஒருபொருளை
> ஓரிடத்தே இட்டு விடாதே
> பின் புலம்பாதே," (197)

என்று கூறுகிறாள்.

முல்லை

இந்நூலில் மற்ற துறைகளைவிட இத்துறைப் பாடல்கள் புதுமையாக, சிறப்பாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியம் காட்டாத பல புதுமைகள், பழக்க வழக்கங்கள் தெளிவாகின்றன. நினைக்குந்தொறும் இன்பம் பயக்கும். 51 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் நாடகப் பாங்கில் அமையவில்லை. வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பது இதில் இயல்பாகவும் சிறப்பாகவும் இருக்கிறது. மணமனை புக்க செவிலி தலைவி இல்லச் சிறப்பைக் கண்டு நற்றாய்க்குக் கூறல், தலைவன் பிரிவு, தலைவி ஆற்றாமை கார்காலத்தில் தலைவன் திரும்பி வருதல் கண்டு தலைவி மகிழ்தல் முதலியன ஒப்புமைக்கூறுகள் இரு இலக்கியத்தும் காணப்படுகின்றன.

1. சங்க இலக்கியத்துத் தலைவி நடத்தும் குடும்பப் பாங்கை செவிலி வாயிலாகத்தான் பெரும்பாலான பாடல்கள் புலப்படுத்துகின்றன. தலைவியின் அன்பு வாழ்வே செவிலி மூலமாகத்தான் புலப்படுத்தப் படுகிறது. தாய் அடைகிற ஒரே மகிழ்ச்சி இதுதானே. தலைவி பொறுப்பான இல்லத்தரசி ஆகிவிட்டாள் என்று பெருமைப் படுகின்றனர் செவிலியர். (137, 139). முகம் நிமிராமல் பார்த்தல், பற்கள் தெரியாமல் சிரித்தல், வாயிலைக் கடக்காமல் நடத்தல், (137) இளமைக்குரியமுறுவல், கடைக்கண்ணோக்கு ஆகியவை (139) இல்லத்தரசியின் இலக்கணங்களாகக் கூறப்படுகின்றன.

2. சில இல்லத்தரசிகள் படம் பிடிக்கப்படுகின்றன.

அ. முதன் முதலாகக் குழந்தை பெற்ற இளம்பெண் என் கணவர் என்ன சொல்வாரோ இதற்கு நான் என்ன சொல்வேன் என்று அஞ்சப் பிறர் நகைத்தல்.

ஆ. நாவிதனைக் கண்டு அஞ்சி ஓடும் குழந்தையுடன் ஓடும் தாய்.

இ. குழந்தைக்குத் முதன் முதலாகப் பல் முளைத்து அதனால் பழம் கடிக்க, அந்தப் பழத்தை ஆர்வத்தோடு தலைவனுக்குக் காட்டி முறுவலிக்கும் தலைவி போன்றோரைக் குறிக்கலாம்.

3. சூளுற்ற தலைவியின் விருப்பத்தைக் கேட்கும் மரபு சங்க மாந்தரிடம் இல்லை. ஆனால் உலகியலில் காணப்படும் உண்மையான உணர்வுப் பாடல்கள் இவ்விலக்கியத்தில் உள்ளன.

அ. விரும்பிய பொருள்களைக் கேட்கும் கணவன் மீது கடைக்கண் செலுத்திக் குறிப்பாக அவனையே நோக்கும் அன்பு மனைவி (105)

ஆ தன் குடும்ப வறுமை நினைத்து ஆசைப்பட்டும் அக் குல மகள் நெருங்கிய நண்பன் வீசிய கடுஞ்சொல்லை யாரிடத்தும் சொல்லாமல் காப்பது போல் தான் விரும்பும் தின்பண்டத்தின் பெயரை வெளியில் சொல்லாமல் தன்னைக் காப்பாற்றும் பொறுப்பான தலைவி. (113)

இ. வறுமை நிலையில் தண்ணீர் மேல்தான் ஆசை என்று கூறும் மாண்பு மிகு தலைவி (147)

4. தலைவன் தண்ணளியை நாணத்துடன் பெறுவாள் சங்கத் தலைவி. "உங்களைத் தவமாய் தவமிருந்து மணந்து கொண்டேன். அன்பு மெல்லிய உணர்வு : நானும் மென்மையானவள். அதனால் அளவுக்கு மீறி அன்பைப் பொழியுங்கள் என்று தலைவனிடம் வேண்டுகிறாள்.

5 சங்க இலக்கியத்துத் தமர் பற்றிய குறிப்பு மிகமிகக் குறைவு. அவர்கள் செயல்களோ சுட்டப் பெறவே யில்லை. இந்நூலில் மருமகளை மெச்சும் மாமியாரைக் காண்கிறோம்.

"மகனே
குடும்பத்திலுள்ள அனைவர்க்கும்
எது நன்று எது தீது
எது நலமும் இன்பம் தரும் எது துன்பம் தரும்?
என்று
எவள் அறிந்து கடைப்பிடிக்கிறாளோ
அவள் தான் உண்மையான இல்லத்தரசி;
வாழ்வாங்கு வாழத்தக்க வாழ்க்கைத்துணை
அப்படி வாழந்தவள் உன் மனைவி
மற்றவர்களெல்லாம் வடிவத்தால்தான் மகளிர்
என்று பெருமைப்படுகிறாள் மாமியார் ஒருத்தி(146)

ஆ. என் அம்பை ஏவினால் எத்தனையோ பிடிகள் கைம் பெண்களாகிய விடும். இது என் மருமகளால் கவனிக்கப் பட்டதும் என்மகன் தன் வேட்டையின் போக்கை மாற்றிக் கொண்டான் என்று பெருமைப்படுகிறாள் மாமியார் ஒருத்தி (131)

6. சங்க இலக்கியத்துத் தலைவிக்குக் கற்பு இயல்பாக்கப் படுகிறது. இவ்விலக்கியத்து வியக்கப்படுகிறது

அ. கார் காலத்தில் தலைவனின் பிரிவில் குரவ மலர் களின் மணம் நுகர்ந்தும் தலைவி கற்பு கெடாமல் இருத்தல் வியக்கப்படுகிறது. (108, 122)

ஆ. தலைவன் மூப்படைந்தும், கற்பு மாறாத மனைவி புகழப்படுகிறாள். 122) சங்க இலக்கியம் ஒத்த வயதுடைய தலைவன் தலைவியரைக் கூறுவதிலிருந்து இது மாறுபடுகிறது.)

7. சங்க இலக்கியத்தில் தலைவியும் ஆற்றாமையால் தூது விடுவாள், இங்குக் கூறப்படும் காரணம் மாறுபாடுகிறது. வேட்டைநாய் இறத்தல், மாமியாருக்குப் பைத்தியம் பிடித்தல், எருமை காட்டை அழித்தல் ஆகியன தூது விடுதலுக்குக் காரணங்களாகின்றன. (132)

8. நான் பிரிந்திருந்த போது எங்ஙனம் ஆற்றியிருந்தீர் என ஐங்குறுநூற்றுத் தலைவன் கேட்பது போன்று இத்தலைவன் கேட்கிறான். கூறும் முறைதான் புதுமையாய் நகைப்பைத் தருகிறது: தலைவனின் நடை, பேச்சு, பார்வை ஆகியவற்றை அப்படியே தலைவி தோழிமாரோடு நடத்திக்

காட்டி மகிழ்வதன் மூலம் மறந்திருந்தேன் என்று தலைவி கூறுகிறாள். 121)

9. பிரிந்த தலைவன் மீண்டும் வரும் போது அல்லில் ஆயினும் உடனழைத்து வரும் விருந்து கண்டு மகிழ்வாள் சங்கத்தலைவி.

அ. இத்தலைவியோ குரவ மலர் மலர்தலைக்கூறிப் பணி முடியும் முன்பே நாடு வந்த தலைவனின் வருகையைத் தன் அத்தைக்குக்கூறி மகிழ்கிறாள். (136)

ஆ. தலைவன் வரும்போது புதுச்செவ்வாடை உடுத்தி, வீட்டை விழாப்போல் ஒப்பனை செய்து, தானே செய்த இனிப்புகளைத் தட்டில் ஏந்தி வீடு வீடாக வழங்குகிறாள் (118) சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவி நிலை கூறிச் சேர விரும்புவான். இந்நூலில் பாங்கன் தலைவி நிலையைத் தலைவனுக்குக் கூறும் போக்குக் காணப்படுகிறது.

10. சங்கப் பாடல் முதியோர் காதலைப் பாடுவதில்லை. பாரதிதாசன் இப்புதுமையைச் செய்தார். இந்நூலில் இது முதியோர் கூற்றாகவே வருகிறது. இக்கூற்று முறையும் புதியதே.

அ. காதலில் வேர் கட்டுடைந்து விட்டது. பசுமரமாக இருந்து செழித்துத் தழைத்துப்பயன் மரமாக வாழ்ந்த காலத்துப் பசுமையான நினைவுகளை நினைத்தல் கூறப் படுகிறது. (104)

ஆ. ஊரவர் முதியவரின் இளமைக்கால எழில் மிகு வாழ்வைப் பெருங்காப்பியக் கதைகளைப்போல வண்ணித்துப் பேசுவதைத் தள்ளாதபருவத்திலும் கேட்டு மகிழ்தல் கூறப்படுகிறது.

இ. முதுமையில் வாழ்வு இனிக்கத்தோழி அறிவுரை கூறுகிறாள். முதுமையிலும் அன்பு குறையாத அகவாழ்வு, பரிசு தரப்படும் அல்லது பெறப்படும் விழா, வேடிக்கைகளோடு கூடிய உறவினர் நட்பும் தேவை. இல்லையேல் விடியற்கால முழுநிலா பொலிவு தராமல் குன்றும் என்று கூறப் படுகிறது. (107)

11. முதல் நாளிரவில் தோழி தலைவியை ஓம்படுத்தும் பாடல்கள் சங்க இலக்கியத்து உண்டு. உடன் போக்கும்

தோழி தலைவனுக்குத் தலைவியை ஓம்ப அறிவுரை கூறுவாள் ஆனால் புக்ககம் செல்லும் தலைவிக்குத் தலைவன் பண்பு நலம் கூறுகிறாள் தோழி. இதுகளவுக் காதல் இல்லாமையால் எழுந்த பாடல் என்று கூறலாம். ஊர்த்தலைவனின் மகன் இளமையும் வலிமையும் மிக்கவன். இச்சிற்றூரை நன்கு காக்கிறான். குடிகள் பாராட்டுகின்றனர். பகைவர் அவன் பேரைக் கேட்டே அஞ்சுகின்றனர். இப்பாடல் மூலம் தலைவன் பண்பையும், பின்னால் தலைவியைக் காப்பதற்குத் தகுதி பெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டுகிறாள் தோழி (128)

12. தலைவன் தலைவியை நலம் பாராட்டுவான். ஆனால் தோழியை நலம் பாராட்டுதல் சங்க இலக்கிய மரபன்று. தலைவனே உன்னைக் காணும்பேறு பெற்றவர்களின் உள்ளமே இன்பக் கடலில் ஆழ்கிறது. அப்படியிருக்க உன்னை மனைவியாக அடையும் பேறு பெற்றவன் எவ்வளவு மகிழ்வான். உண்மையிலேயே உன் கணவன் கொடுத்து வைத்தவன். (123) என்று வடுகத்தோழி தலைவியைப் பாராட்டுகிறாள்.

13. சங்க இலக்கியம் தலைவியைப் பருமனாகவே காட்டுவதில்லை. இவ்விலக்கியத் தலைவனோ நகையாக,

"அவள் உப்பிலியம் ஆடட்டும்
அவளைத் தடுக்காதீர்
அவளுடைய உடற் பருமன்
அப்படியாவது குறையட்டும் இடை
மெலியட்டும் (124)

என்று மொழிகிறான்.

14. நாணுடைய சங்கத்தலைவி தன் அக வாழ்வைத் தோழியைத் தவிர மற்றவரிடம் கூறாள். இவ்விலக்கியத் தலைவியோ, தன் செவிலியிடம், தன் கிளியாவது அந்தப்புர நிகழ்ச்சிகளைப் பெரியோர் முன்னிலையில் கூறுவதாகக் கூறுகிறாள்.

15. தலைவியின் உறுப்புகளைத் தலைவன் மட்டுமே பார்த்து நலம் பாராட்டுவதாகக் கூறல் சங்க இலக்கிய மரபு. ஆந்திர இலக்கியத்தில் அன்பான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையில் தலைவியின் நகில் பெருக அதைக் கண்டு அவளுடைய உற்றார் உறவினர் உள்ளூர் உறவினர், வேடனின் பரத்தையர் ஆகியோர் ஏங்குகின்றனர் (145).

16. சங்க இலக்கியத்தில் தலைவனுடைய உடன் பிறப்புகளைப் பற்றிய குறிப்பு இல்லை. இவ்வியல் மொழித்தலைவி நெறி மாறும் கொழுந்தனாரே,

வானத்தை ஏன் பார்க்கிறீர்
உம் இல்லாளைப் பாரும் கொழுந்தனாரே " 130

என நெறிப்படுத்துகிறாள்.

17. இந்நூலில் தலைவன் தலைவியை நலம் பாராட்டும் விதம் புதுமையாக அமைகிறது.

"குற்றமற்றதும் சொற்பொருள் நயம் மிக்கதும்
அணியழகு நிறைந்ததுமான அழகிய கவிதைகளைக்
கற்று உரையாடுவது போன்ற ட்த்துநிலைத்த

நீடித்து நிலைத்த உள்ளக் கிளர்ச்சிதரும் இன்பமாக இலங்குகிறது. (149)

ஊரிலுள்ள வீடுகள் பற்றி எரிந்த போது தீயணைக்க இருவரின் கைகளும் மாறி மாறித் தண்ணீர்க் குடங்களை எடுத்துத் தந்த பழைய காட்சிகைத் தலைவன் தலைவியிடம் கூறி மகிழ்கிறான்.

அன்றைய நிகழ்ச்சியை வேடன் தன் மனைவியிடம் கூறி மகிழ்கிறான். வேடனின் அம்புக்கு இலக்காக, கலைமானும் பிணைமானும் மாறிமாறி வந்து நிற்கின்றன. வேடன் தன்மனம் உருகி வில்லையும் அம்பையும் வீசி எறிந்து கண்ணீர் சொரிதல் காட்டப்படுகிறது.

18. தலைவனோ தலைவியோ உடல் நலன் குன்றியதாகச் சங்க இலக்கியம் காட்டுவதில்லை. இவ்விலக்கியத் தலைவி படுக்கையில் இருக்கிறாள். தோழி உருவகமாகக் கூறுகிறாள்.

ஆவே !
உனக்காகவே காளை வாழ்கிறது.
இளங்கடாரிகள்
காளையின் காப்பால் நலம் பெறுகின்றன.
ஆவே நீ வாழ்ந்தாக வேண்டும்

இந்தக் கொட்டில் உன்னையே நம்பி இருக்கிறது. (127)
நேராக குடும்பநிலையைக் கூறாமல் உருவகமாகக்கூறி நம்பிக்கை இழக்குந் தோழியின் அறிவு சிறக்கிறது.

19. கணவன் இறந்த நிலையில் விதியைப் பார்த்து தலைவி பேசுவது போன்றுள்ளது. இப்பாடல் சங்க இலக்கியம் காணாத புதுமையுடையது.

"ஊழ்வினை (விதி) வலிமையுடையது என்கிறார்கள்
அந்த ஊழால்
என்னிதயத்தில் அவரைப் பிரித்து விட முடியுமா?
என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும் அவர்
இன்னுரையைக் கவர்ந்து கொள்ள முடியுமா?
அவர் என்னைத் தொடுதலால் ஏற்ப்பட்ட இன்ப உணர்வுகளைப்
பறித்துக் கொள்ள முடியுமா?
என் கண்ணில் நிலைத்து உயிரோடு ஒன்றிப் போய் விட்ட
அவருடைய எழில் உருவத்தை எடுத்துச் செல்ல முடியுமா?
வேறு என்ன செய்ய முடியும் என்று கேள்.
காதல், நினைவில் வடிவம் என்பதை
அந்த ஊழுக்கு விதிக்கு நினைவு படுத்துக (116)

பாலை

இத்திணையில் 97 பாடல்கள் உள்ளன. தலைவி ஆற்றாமை பற்றிய பாடல்களே அதிகமாக எழுந்துள்ளன.

இளையவளின் கொங்கை போன்று செல்வ நிலையில் நிமிர்ந்து நின்ற தலைவன் முதியவளின் நகில் வயிற்றையே சார்ந்து நிற்பது போன்று வறுமையுற்ற நிலை தளர்ந்து வயிற்றையே பெரிதாக நினைந்து சார்ந்து வாழ வேண்டியவனானாள் (229) பிரிவு வேண்டியிருக்கும் தலைவனைத் தோழி செலவழுங்குவிக்கிறாள்.

"கையில் இருப்பதுதான் செல்வம்
உண்மையான நண்பன்
பண்போடு கூடியதால்
இயற்கையான அழகு
இறையுணர்வோடும் அறத்தோடும்

கூடியதுதான்
நெறிப்பட்ட அறிவு."

என்று தோழி உலக நெறி கூறுகிறாள். (171)

சங்க இலக்கியத்தும் தலைவியின்நிலை கூறித் துன்பம் கூறிச் செலவழுங்குவித்தல் தோழியின் கடமையாதல் போல இத் தோழியும் செயலாற்றுகிறாள். ஆனால் தலைவியின் துன்பம் புதுமையாகக் கூறப்படுகிறது.

அ. தலைவன் பிரியப் போகிறேன் என்று சொன்னதுமே தலைவி வீடு வீடாகச் சென்று தலைவன் உன்னைப் பிரிந்ததுண்டா? பிரிவில் நீ எவ்வாறு ஆற்றியிருந்தாய் (161) என வினவுகிறாள்.

ஆ. தலைவி இரவை நோக்கி,

இரவுப் பெண்ணே !
இன்று இரவுப்போது விடியவே வேண்டாம்
அவர் பிரிந்து சென்றபின்
இனி வரும் இரவுகள்
மிக மிகச் சிறிதாக இருக்கட்டும் (156)

என வேண்டுகிறாள்.

இ. பகற் பொழுதில் தலைவன் கடமையில் ஈடுபடும் போதும் தலைவியின் கண்கள் பாலைவனத்தில் தண்ணீருக்காக அலைபவர்களைப் போல அலைந்து தேடுவதைச் சுட்டிப் (249) பிரிவைத் தடுக்கிறாள் தோழி.

2. கரும்புள்ளிமான்வலமாகச் செல்லுதல் போல் தலைவியின் கருங் கண்கள் தலைவனைத் தடை செய்கின்றன. (153)

3. செலவழுங்கிய தலைவனுக்கு மணலாற் சுவரெழுப்பி வீடுகட்ட முயல்வது போலத் தலைவன் செய்யும் முயற்சிகள் வீணாகும் என்று சுட்டுகிறான் பாங்கன் (166)

4. தலைவனின் பிரிவில் தலைவியின் ஆற்றாமைப் பாடல்கள் தான் அதிகமாயுள்ளது. தலைவியின் பிரிவு பல நிலைகளில் காட்டப்படுகிறது.

தலைவியின் அழுகை நாடகம் பெறுகிறது

அ. நாளை நான் உயிரோடிருந்தால் அழுகிறேன், இன்று என்னை அழவிடு எனத் தோழியைத் தலைவி வேண்டுதல்(238)

ஆ. தலைவி சிந்திய கண்ணீர் அவள் முதுகையும் நினைத்தல் (174)

இ. பிரிவுக் கண்ணீரால் வீடு நனைதல் (217)

ஈ. மழையின் வெள்ளத்தில் ஒழுகும் கூரையிடமிருந்து புதல்வனைக் காக்கிறாள். ஆனால் அவள் கண்ணீர் வெள்ளத்தால் குழந்தை நனைவது அவளுக்குத் தெரியவில்லை. (213)

உ. மங்கல விளக்கு ஏற்றும் போது கண்ணீர்த்துளி விழாமலிருக்கக் கடிவாளம் இழுப்பதால் பின்னுக்கு இழுக்கப்பட்ட குதிரையின் முகம் போல் தலை வளைத்துக் குனிந்தவாறு தலைவி விளக்கேற்றுதல் (174)

ஊ. கீழுதடு நெட்டுயிர்ப்பட்டு வெப்பமுறுகிறது. கண்ணீர்த்துளி நனைக்கிறது. இது சியாமள சாபல சூளுரை போல உள்ளது. (190) என இவ்வாறு தலைவியின் அழுகை சுட்டப்படுகிறது.

பிரிவில் தலைவி தூங்காமை :

அ. தலைவி தூங்காமல் புரளும் போது எழும் வளை ஓசையில் தான் அவள் உயிர் இருப்பது தோழியர்க்குத் தெரிவித்தல் (169)

ஆ. தூங்குவதால் கனவு காணும் பெண்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று கூறித் தூங்காமையை அறிவித்தல் (235, 241)

இ. செறிந்த இருள், தனிமை, தலைவன் பிரிவு, கள்வர் அச்சம், ஆகியவற்றைக் கூறிப் பக்கத்து வீட்டுக்காரர்களே, அருள் கூர்ந்து விழித்திருங்கள் என வேண்டுதல் (172) என இவ்வாறு தலைவனின் பிரிவில் தலைவன் தூங்காமையும் புலப்படுத்தப்படுகிறது

தலைவன் வருகை நோக்கிக் காத்திருத்தல் :

அ. தலைவன் சென்ற திசையைத் தலைவி நோக்கி நிற்றல் (216)

ஆ. தலைவி தலைவனுக்காக வாயிலில் அமர்ந்து எதிர் பார்த்து வாடும் நிலை ஒரே நாளில் வாடும் வரவேற்பு மாலை போல் இருத்தல் (167)

இ. மாதவிக் கொடியோ வாசலை மறைக்கிறது. குலமகள் வாயிலில் நிற்பதோ, வாயிலைக் கடந்து நிற்பதும் முறையன்றே. தலைவன் வரவை எவ்வாறு பார்ப்பது என்று தலைவி வருந்துதல் 180) என இவ்வாறு தலைவன் வரவு நோக்கிக் காத்திருக்கும் தலைவியின் நிலை புதுமையாகக் காட்டப்படுகிறது.

தலைவன் பிரிவில் வீட்டு நிலைமை கூறல் –

அ. தலைவனின் பிரிவில் தலைவியின் தோற்றம் செல்வம் இல்லாத வீடாக, நீர் வறண்ட ஊற்றாக மாடுகள் இல்லாத கொட்டிலாக மாறுதல். 232)

ஆ. தலைவனின் இல்லமும் சீறூரும் அடியற்று வீழ்ந்த ஆலமரம் இருந்த இடம் போல ஆகுதல். (182)

இ தலைவன் பிரிந்த அன்றே தலைவியின் இதயம் நெடுஞ்சாலையின் நுழைவாயிலைப் போல பெருவாயில் முற்றத்தைப் போல வெறிச்சோடி விடுதல் (189)

ஈ. தலைவியின் துன்பமோ மருத்துவன் தீர்க்க முடியாத நோயாக, வளமாக வாழும் சொந்தக்காரர்களின் நடுவே செல்வமிழந்து வறுமையோடு வாழ்வது போன்று, பகைவனின் பெருஞ்செல்வத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று தாங்கொணாத் துன்பத்தைத் தருதல் (179) என இவ்வாறு தலைவனின் பிரிவில் வீட்டு நிலைமை கூறப்படுகிறது.

வளை கழலுதல்

அ. சோற்றுருண்டையை வைத்துக் கொண்டிருக்கும் கையில் வளையல் விழுந்து விட்டதால் காக்கை தன்கைப் பிடிக்க வைத்த கண்ணியாக இருக்குமோ என்றஞ்சுதல் (204)

ஆ. மாமியாருக்குமுன்வளை கழன்று விழக் கொடுமையான மாமியார் தன்னையறியாமல் மனமிளகிக் கண்ணீர் வடித்தல் (228) என வளை கழலுதல் இவ்வாறு புதுமையாக்கப்படுகிறது.

சாவை விரும்புதல்

இப்பிரிவு சங்க இலக்கியத்தில் இல்லை.

அ. பிரிவுத் துன்பம் தாங்காத மகளிர் ஓரிருவர் இவ்வூரில் இருக்க வேண்டும். அப்போதுதான் பிரிவுத் துன்பத்தின் கொடுமையை ஆடவர் உணர்வர் எனத் தோழி நொந்து கூறுதல் (215)

ஆ. கணவனின் பிரிவில் இறக்க விரும்பினும் தன் குழந்தை ஓடி வருவதைக் கண்டதும் உயிர் வாழ்ந்தே ஆக வேண்டும் என்று தலைவி எண்ணுதல் (225) என்று இப்பிரிவு புதுமை யாகக் கூறப்படுகிறது.

பிரிவு நாட்களை எண்ணுதல்

சங்க இலக்கியத்தும் கோடு போட்டு என்னும் வழக்கம் உண்டெனினும் இங்குப் புதுமை கையாளப்படுகிறது.

அ. வெள்ளம் அழித்து விடாமல் தான் போட்டக் கோடுகளைக் காக்க இரு கைகளாலும் நீரைத் தடுத்தல் (187)

ஆ. அறியாப் பெண் கணவன் பிரிந்த நாட்களைக் கை விரல் கால் விரலால் எண்ணி இருபத்தோராவது நாளை எதனால் எண்ணுவது என்று திகைத்தல் (162)

இ. நாட்கள் கடந்து விட்டால் தலைவியின் துன்பம் பொறுக்க முடியாது என்று தலைவிக்குத் தெரியாமல் தோழி யர் புள்ளிகளை அழித்து விடுதல் (205) என்று தலைவியின் துன்பம் புதுமையாக்கப்படுகிறது.

பருவ வரவு தலைவியைப் பெரிதும் வாட்டுதல்

அ சங்க இலக்கியத்தில் பருவ வரவு தலைவியைப் பெரிதும் பாதிப்பதாகக் கூறப்படும். இந்நூலில் மா பூத்தது ? தென்றல் வீசுகிறது. தலைவன் வேலை முடிந்திருக்காதா என மாமியிடம் தலைவி வினவுதல் (185)

ஆ. மா துளிர்க்கவில்லை. தென்றல் வீசவில்லை. உள்ளம் மட்டும் இளவேனில் வந்தது என்று என்னைத் துன்புறுத்துகிறது என மாமியிடம் கூறல் (218)

இ. மேகங்களைப் பார்த்து மயங்குதல் (242)

ஈ. தலைவியின் துன்பத்தை மாமியார் ஆற்றுதல். தன் வேலைகளைவிட்டு விட்டு மருமகள் அருகிலேயே இருத்தல். கார்கால மேகம் அவள் கண்ணில் படாதபடி காத்து வருதல். (181)

உ கணவன் பிரிவில் கண்ணீர் வடிக்கும் தலைவிக்குக் கார்காலமும் கண்ணீர் வடிப்பதாகத் தோன்றுதல் (163)

ஊ. சுடுகாட்டுச் சாம்பலில் நண்பன் எலும்புகளை வேதனையோடு பொறுக்குவது போன்று. தலைவன் வருவதாக கூறிச் சென்ற மாதத்தில் மதுக மரம் பூத்துதிர்த்த கடைசிப்பூக்களை வேதனையோடு பொறுக்குதல். (157)

எ. கார்ப்பருவத்தை வம்பு என்று கூறல் சங்க இலக்கியத்தும் தோழி கையாளும் உத்தியானாலும் இவ் விலக்கியம் கையாளும் உத்தி புதியதே. விந்திய மலை முகட்டின் பசுங்காடு கார்மேகம் போல் தோற்றமளிக்கிறது. மயங்காதே என்று தோழி ஆற்றுதல் (160) என இவ்வாறு பருவ வரவு தலைவியை வாட்டுவது பல கோணங்களில் படம் பிடிக்கப்படுகிறது.

வெண்ணிலவு

வெண்ணிலவு தலைவியைச் சுட வில்லை. ஆனால் அதனிடம் உதவி வேண்டுகிறாள் தலைவி. வான மகளின் நெற்றிப் பொட்டாக இருக்கும் வெண்ணிலாவே, நீ மங்கல மகளிரின் வாழ்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டாமா ? அவர் இருக்குமிடம் உனக்குத் தெரியும். உன் ஒளிக்கற்றையால் என்னைத் தொடுவது போலத்தானே அவரையும் தொடுவாய். எனக்கு ஒரே ஒரு உதவி செய். வேற்றூரிலிருக்கும் என் கணவரை எந்த நிலாக் கதிர் கையால் தொடுகிறாயோ அதேகையால் என்னையும் தொட மாட்டாயா என உதவி வேண்டுகிறாள். (155)

விழா ஆரவாரம் :-

தலைவனின் பிரிவில் விழா ஆரவாரம் தலைவிக்கு வேதனையைத் தருகிறது. எரிச்சலை ஊட்டுகிறது. ஊர் முழுவதும் தீப்பற்றி எரியும் அவலப் பேரொலியாகத் தெரிகிறது விழாவில் கலகலப்பு துயரத்தின் வெடிப்பாகிறது. (221)

உடல் வெளுத்தல்

சங்க இலக்கியம் இதைப் பசலை பாய்தல் என்று கூறும் காதலன் பால் பழுத்துச் சிவந்தது உள்ளம். உடல் மட்டும் தலைவனின் பிரிவில், வெளுத்துப் போய் விட்டது என்று கூறுகிறாள் தலைவி (10)

வழி ஏதம்

சங்க இலக்கியத்தில் வழி ஏதம் தலைவியின் பிரிவுத் துன்பத்தைச் சுட்டக் கையாளப் படுகிறது. வீட்டுக்கு வந்த

விருந்தினர் வழி ஏதம் கூறக் கேட்டு மருமகள் மயங்கி விழுகிறாள். (158) என இந்நூலிலும் வழி ஏதம் கூறப்படுகிறது.

தலைவியின் அச்சம்

அ. தன்வீட்டு முற்றத்தில் முளைத்த மாஞ்செடி தலைப் பகுதியிலிருந்து முளை விட்டிருப்பதால் தலைவன் நலமாக வீடு வந்து சேரவேண்டும் என்று தலைவி வருந்துதல் (23)

ஆ. தாய் வீட்டிலிருந்து வரும் தலைவி தன் இல்லம் சேரும் வழியில் சாஞ்ச மரத்தில் யானை தன் தலையைத் தேய்த்ததால் ஏற்பட்ட குருதியைப் பார்த்துத் தன் கணவன் யானையால் கொல்லப்பட்டதை உய்த்துணர்ந்து நிலை குலைந்து போதல் (194)

பெரும்பாலும் பாலைக்காட்சிகள் தலைவனின் பிரிவில் தலைவி உறும் வேதனையையே சுட்டுகின்றன. குருடன் கையிலிருக்கும் பானையின் உள்ளிருப்பதைப் பிறர் கவர்வது போலத் தன் கணவனைப் பொறாமைக்காரர்கள் அடிக்கிறார்கள். தலைவி, தன் கண்ணுக்குத் தெரியாமல் பாம்பின் படம் திடீரென்று வந்து தீண்டிக் கொள்வது போல் இருக்கிறது (177) என்று கூறும் உத்தி புதியது.

தலைவனின் துன்பம்

தலைவியின் துன்பம் போன்றே அவளது பிரிவில் தோன்றும் தலைவனின் துன்பமும் இந்நூலில் சிறப்பாக விளக்கப்படுகிறது.

அ. மந்தர மலை பாற் கடலைக் கலக்கியதை விடத் தலைவியின் பிரிவு தலைவன் உள்ளத்தைப் பெரிதும் கலக்குதல் (248)

ஆ. வழியிடை யானை கொத்தாகப் பறித்த குவளை யினின்றும் சொட்டும் நீர் தலைவியின் கண்ணீரை நினைக்கச் செய்து ஏங்குதல் (24)

இ. மதுக மலர்கள் தன் மனைவியின் கன்னம் போன்றிருத்தலால் அதனை முகர்ந்து மகிழ்தல் (209)

ஈ. கார்மேகமே, எவ்வளவு வேண்டுமானாலும் முழங்கு, அவளை மட்டும் கொல்லாதே என வேண்டுதல் (224) என இவ்வாறு தலைவனின் துன்பம் புலப்படுத்தப்படுகிறது.

தலைவன் வரவு குறித்து மகிழ்தல்

தலைவன் வருகையை இடக்கண் துடித்துத் தெரிவிக்கிறதாம். அதனால் தலைவி நன்றியுடன் வலது கண்ணை மூடிக் கொண்டு இடக்கண்ணால் மட்டும் பார்ப்பாளாம்.

வினைமுற்றி மீளும் தலைவன் பாகனை விரையும்படித் தூண்டுதல் சங்க இலக்கியம் கண்ட மரபு. ஆனால் ஆற்றிடைக் கண்டோர், "கால இடைவெளி காதலை விழுங்கி விடும். கையிலேந்திய நீர் விரல் சந்துகளில் வழி ஒழுகிப் போவது போலக் காதல் வறண்டு விடும்" என்று கூறித் தலைவனை இந் நூலில் முடுக்குகின்றனர் (173)

சங்க இலக்கியம் காட்டும் அளவிற்கு இவ்விலக்கியம் அருஞ்சுரக்காட்சி காட்டுதல் இல்லை. காட்சிகளும் மிகக் குறைவே. எருமை கற்பாறைகளுக்கிடையில் கிடந்த பாம்பை நீரூற்று என நக்க, எருமையிலிருந்து நாவிலிருந்து ஒழுகும் நீரைக் கரும் பாறையிலிருந்து ஊறி வரும் சுனை நீராகப் பாம்பு பருகுகிறது. (223) இதை இந் நூலில் வரும் அரிய வருணனை எனலாம்.

மருதம்

இத்திணையில் 101 பாடல்கள் உள்ளன. சங்க இலக்கியத்தில் மருதத்திணையில் உள்ள பரத்தையிற் பிரிவு போன்று இவ்விலக்கியத்தும் காணப்படுகிறது. சங்க இலக்கியத்துத் தலைவி தோழியைத் தவிர யாரிடமும் தன் காதலைப் பற்றியோ பிரிவு பற்றியோ கூற மாட்டாள். இந்நூலில் அத்தை மாமியிடம் குறை கூறிக் கொள்ளும் தலைவியர் உண்டு.

பரத்தமை நிலை

"அத்தையீர் வேறு யாரையோ பார்ப்பது போல் தலைவர் என்னைப் பார்க்கிறார். அந்தப் பார்வையில் அன்பும் இல்லை. ஆர்வமும் இல்லை. அதனால் தலைவர் பரத்தமையுடையவர் என்று தான் கண்ட முடிவைத் தலைவி அத்தைக்குக் கூறுதல் (340)

ஆ தலைவன் மறதியால் வேறு பெயரிட்டழைக்க, அவர் விரும்பிய அந்த ஒருத்தியின் மீதாவது ஆழ்ந்த காதல் கொள்ளட்டும். என்று தலைவி தன் ஆதங்கத்தை வெளியிடுதல் (314)

இ. தன்னைவிடப் பரத்தை நல்லியல்பு கொண்டவளா எனத் தலைவி துடித்தல். (256)

ஈ. களிற்று மருப்பின் முத்து மாலைகளால் ஒப்பனை செய்து கொண்டு வேட்டுவனின் காமக் கிழத்தியர் பலர் ஒய்யாரமாக நிற்கிறார்கள், ஆனாலும் வேட்டுவனின் மனைவியோ மயிலிறகு மட்டுமே சூடிப் பெருமிதத்துடன் நடந்து செல்கிறாள் இது காமக் கிழத்தியரால் முடியவில்லை எனத், தலைவியின் ஏற்றத்தையும் பரத்தையரின் புன்மையையும் தோழி சுட்டுதல் (297)

உ. பரத்தையர் தலைவனின் பிரிவில் அழாமை, நெட்டுயிர்க்க மாட்டாமை, உடல் மெலியாமை முதலிய அன்புச் செயல்களைக் கூறத் தலைவி தன் நிலை கூறல் (309)

ஊ. பரத்தையர்க்குத் தெரிந்த நடுங்குதல், வியர்த்தல், மயிர்க் கூச்செறிதல், நெட்டுயிர்த்தல் நாட்டியமாடுதல் போன்றவை எனக்குத் தெரியவில்லை. கணவனைக் கண்டவுடன் என்னையே மறந்து விடுகிறேன் என்று தன்னை நொந்து கொள்வது போல் தன் அன்புடைமை கூறுதல் (283)

எ. தலைவன் குற்றங்களைக் கைவிரல் கொண்டு எண்ணி எண்ணி அடங்காமல் போய் விடவே எண்ணுவதை நிறுத்திப் பெரு மூச்சு விடுதல் 273)

ஏ. தலைவி சினம் கொள்ள நினைத்தும் முடியாமல் காதலனைக் கண்டதும் கள்ளக் காதலன் போல் ஓடி ஒளிவதைக் கூறுதல் (303)

ஐ. தன் துன்பத்தை மாமியிடம் கூறல் (258)

ஒ "மாமி, காதல்மரம் தன்மான வேரூன்றி நிலைத்த அன்புக் கிளைகளால் தழைத்துச் செழித்து வளர்கிறது. அதனால் போலும் அது விழுந்த போது ஓசையே கேட்க வில்லை" என்று மாமியிடம் தலைவி தன் காதல் நிலை புலப் படுத்துதல் (344)

ஓ. தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி தேனீயை விளிக்கும் முகமாக, முன்பு மாலதி மலரையன்றிப் பிற மலரை நாடாதிருந்தாய். இப்போது மாலதிக்கொடி பிஞ்சுகளாலும் காய்களாலும் நிரம்பியிருக்கிறது. நீ மாலதி இருக்கும் பக்கமே எட்டிப் பாராமலிருக்கிறாய் என்று தலைவன் நிலையும் தலைவி நிலையும் தோழியால் சுட்டப்படுதல். (307)

ஔ. வேடர்கள் முத்தை விரும்பி அணியாமல் குஞ்ச விதைகளை மாலையாகக் கட்டி அணிவது போல் நான் தலைவனின் குணங்களால் கவரப்படாமல் காதல் கவர்ச்சிக்கு இரையாகி விட்டேன் என்று தன்னையே நோதல். 287)
என இவ்வாறு தலைவனின் பரத்தமை நிலை பழித்துரைக்கப் படுகிறது.

சங்க இலக்கியத் தலைவி, தான் தலைவனைக் காதலித்தது தவறு என்று நினைப்பதில்லை. வேறொருத்தியை நாடித் தலைவன் பிரிவதைப் பொறுப்பதைவிடச் சாவு விரும்பத்தக்க தாயிருக்கும் என்று சாவையே வரவேற்கிறாள் தலைவி. 255) கிட்டுவதற்கு அரியவன் என்று தெரிந்தும் ஏன் விண்ணேறித் தாவுகிறாய். சுக்குநூறாக உடைந்து விடுவாய் என்று நெஞ்சிடம் கூறுகிறாள் தலைவி சங்க இலக்கியத்தில் தலைவன் இவ்வாறு கூறுதல் உண்டு.

சங்கத் தலைவி பரத்தமை மேற்கொண்டொழுகும் தலைவனை வாயில் மறுப்பாள். வாரல் எம் தெரு, எம்மனை, எம் சேரி, என்று வாயில் மறுப்பாள். ஆனால் இத்தலைவியோ தலைவனைக் கடுமையாகவே திட்டுகிறாள். பொய்க்கும் காதல், நான் உன்னை நினைந்திலேன்; நான் உன்னை நினைக்க முயன்றும் முடியவில்லை. கவிழ்க்கப்பட்ட ஒரு துளி நீராவது தங்கிநிற்குமா ? 322) என்று தன் அன்பின்மையை வெளிப்படையாகவே கூறுவாள்.

சங்கத் தலைவனின் இழிகுணங்களைப்
பேசுவதில்லை இவளோ,

"தோழி, இந்த இழிசினன்
மத்தளம் போல்
இருமுகங்களும் இரண்டு வாய்களும் கொண்டவன்
வாயால் சுவையாக உண்ணும்போது
மிக இனிமையாகப் பேசுவான்.
அது வயிற்றில் செரித்த பிறகு
கடுமையாக இன்னாதவற்றைப் பேசுவான்
மத்தளத்தின் மண்மெழுகு மார்ச்சனை
உதிர்த்தால்
அதன் ஒலி கடுமையாகிற தல்லவா ? (262)

இதைவிடக் கடுமையாக நனி நாகரிகத்துடன் திட்ட முடியுமா ? தாயன்போடு பரத்தமைத் தலைவனைத் திருத்த முயல்கிறாள் தலைவி ஒருத்தி. மது காய்ச்சப் படுவதற்கு மூட்டப்படும் நெருப்பு தெய்வத்தின் திருமுன்பும் எரிக்கப் படுகிறது. தலைவன் மேலோர் கூட்டத்தில் சேர்ந்து திருந்த முடியும் என்று அறிவுரை கூறுகிறாள் தலைவி. (266)

தலைவி உரிமையோடு தலைவனைக் கடிகிறாள். தோழியின் கூற்றில் கடிதலைவிட இரங்குதல் அதிகமாயுள்ளது. தலைவனைத் திருமணம் செய்வதற்கு முன்னும் பின்னும் தலைவி இருந்த நிலையைத் தோழி ஒருத்தி மிக அழகாகச் சுட்டுகிறாள். திருமணத்திற்கு முன் மகிழ்ச்சி என்னும் ஒரு மெய்ப்பாட்டைத் தவிர வேறு அறியாதவள். திருமணத்திற்குப் பின்

"ஒரே நாளில்
அழுதல், தேம்புதல், ஏங்குதல்
தூக்கமின்றிக் கொட்டாவி விடுதல்
வெளியில் சொல்ல முடியாமலும்
துன்பங்களைச் செரிக்கமுடியாமலும் திணறுதல்
ஆகிய பல உணர்வுகளை உன்னால்
கற்றுக் கொண்டாள் (285)

என்று நயமாகக் கூறுகிறாள் தோழி. காதலின் தத்துவத்தை விரிவாகக் கூறுகிறாள் தோழி. (231)

"காதல் அடியோடு வெந்து கருகி விடுவது உண்டு ;
அது எப்போது தெரியுமா ?
இழிந்தவன் ஒருவனைக் காணும்போது ;
காதலூற்று வறண்டு போவதுண்டு
அது எப்போது தெரியுமா ?
பிறரை வசை பாடிக் கொண்டிருக்கும்
பேனாவைக் காணும்போது
ஆண்மகன் என்பதால்
மட்டும் காதல் அரும்பாது, (251)

என்று அழகாகக் கூறுகிறாள். நாள்தோறும் தலைவி உன்னையே நினைத்துப் போற்றி வந்தாள். நீ அவளை

மணக்கவில்லை, அதுமட்டுமன்றி வேறொருத்தியின் பெயரை அவளுக்கிட்டும் அழைப்பதை அவள் எவ்வாறு பொறுத்துக் கொள்வாள் (251) என்று கடிகிறாள் தொழி. தலைவனின் பிரிவுக்குத் தலைவியின் இறப்பு ஒன்றுதான் பெறத் தக்க பரிசு என்று தோழி நொந்து கூறுகிறாள் (252, 278) தலைவியின் இறப்பைக் கனவிலும் நினைக்க இயலாத தோழியின் நினைப்பு இங்கு மாறுபடுகிறது.

வாயில் வேண்டித் தலைவனிடமிருந்து தூது வருகிற போது, சங்கத் தலைவி போன்று இத் தலைவியும் வாயில் மறுப்பதுண்டு. இந் நூலில் காணப்படும் இரு பாடல்களும் சுவையும் நயமும் கொண்டவை. நேரிடையாக மறுக்கும் போக்கு இங்கு இல்லை. தோழியுடன் கூறு முகத்தான் வாயில்கள் மறுக்கப் படுகின்றனர். "கிழட்டுப் பூனைக்குக் கசப்புக் கஞ்சி கொடுத்து வசப்படுத்த முடியுமா? கஞ்சி எப்படிப்பட்டது என்று பூனை தொலைவிலிருந்தே தெரிந்து கொள்ளுமே (270 என்று தன் மறுப்பைத் தெரிவிக்கிறாள் தலைவி. நிவைத்ததைப் பெற்றதும் ஊரில் திரியும் நாய்கள் ஓடிப் போகின்றன அத்தகைய நாய் போன்றாரின் நட்பு வேண்டாம் என்று தலைவி கூறும் முறையில் தலைவன், வாயில் இருவருக்கும் பொருந்தும் முறையில் சிலேடையாக நாய் கூறப்படுகிறது. 319)

தலைவனின் பரத்தமையைப் பாங்கன் கடிவதாகச் சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் கூட நமக்குக் கிடைக்கவில்லை. ஆந்திரநாட்டு இலக்கியத்தில் இப்பிரிவில் மிகச்சிறப்பாகப் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனைப் பாங்கன் நேரிடையாகக் கடிவதில்லை. மரத்தை உவமித்தும், வண்டை நோக்கிக் கூறியுமே தன் எதிர்ப்பைத் தெரிவிக்கிறான்.

"வண்டே,
நீ ஒரு மண்டு போலும்
அழகிய தாமரை மலர் இருப்பதை நோக்காமல்
பழுத்த விழா மரத்தின் மணத்துக்காக ஏங்கி
அங்கு ஏன் போகிறாய் ?
அதை உன்னால் தொட்டு உடைக்க முடியுமா ?
நீ ஓர் அறிவிலி
ஓவியத்தின் வரையப்பட்டுள்ள
இளிப்புச் சிற்றுண்டியை எடுக்கக்

கை நீட்டி ஏமாந்ததைப் போன்றுள்ளது.
உன் செய்கை (334)

எவ்வளவு நயமாகத் தலைவனின் பேதமையை - பரத்தமையின் இழிவை - தலைவியின் சிறப்பைச்-சுட்டுகிறான் பாங்கன்.

தலைவனின் நெஞ்சம் புறமகளிரின் கவர்ச்சிக்கு இழுக்கப் பட்டமையை ஒரு பசுமரத்துடன் உவமித்து பிந்தைய நிலைக்கும் அஞ்சுகிறான் பாங்கள்.

ஒரு செழிப்பான மரம். அது காட்டாற்று வெள்ளக் கவர்ச்சிக்கு இரையாகிப் பல இடங்களைக் கவர்ந்து வந்தது. ஆசையில் மெய்ம் மறந்து மிதந்தது. இறுதியில் காட்டாற்றால் வெறுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்டுக் கரையில் சேர்ந்தது. கண்டவர் கையில் கிடைத்து விறகாக எரிக்கப்பட்டது, கரையில் ஒதுக்கப்பட்ட போது வேரிருந்தும் வேரூன்ற முடியாமல் உலர்ந்து, போய் விட்டது.'' என்று தலைவனின் பரத்தமைய நயமாகக் கண்டிக்கிறான் பாங்கன்.

தலைவன் பிரிவில் மெலிந்த தலைவியைக் கண்ட பாங்கன் வினவ அவள் ஒன்றும் பேசாது மாலை மாலையாகக் கண்ணீர் விட, அவள் துயரம் கண்டு பாங்கன் தானும் கண்ணீர் விட வேண்டி வந்ததைக் கூறுகிறான். (281) இவ்வவல ஓவியம் பேகனைப் பிரிந்த கண்ணகியின் துயரத்தையும் புலவர்களின் வேதனையையும் நினைவூட்டுகிறது.

சங்க இலக்கியத்தில் பரத்தமை நிலையில், வாயில் வேண்டும் நிலையில் தோழி கடியும் போக்கு அதிகமாகவும் தலைவி கடியும் நிலை குறைவாகவும் காணப்படுகிறது. இவ் விலக்கியத்து மாறுபட்ட நிலை காணப்படுகிறது. இந்நூலில் தோழி பிரிவு வேண்டியதே என்று கூறுகிறாள்.

கூடிக் கலந்த காதல்
ஓர்அறு சுவை யுணவு
பிரிவுத் துன்பம்
உண்டது செரிக்காததால் ஏற்படும் வயிற்றுவலி
வயிற்று வலி நீடிக்கக் கூடியதன்று.
அது நமக்கு ஒரு பாடம் புகட்டும் ஆசிரியன் (321)

என்று தோழி பிரிவு வேண்டியதே என்று நிலை நாட்டுகிறாள். (321) நெருப்பு வீட்டை எரித்து விடுகிறது என்பதால் யாராவது நெருப்பை விரும்பாமல் இருக்கிறார்களா? பயன் படுத்தாமல் வாழ முடிகிறதா? (297) என்று வினவுகிறாள் தோழி ஒருத்தி. கோடைக்ககலத்து நீர் நிலை போல்-சினமுற்ற சான்றோர் உள்ளம் போல்-உள்ளே குளிர்ந்தும் மேற்பரப்பில் சூடாகவும் இருப்பது போல் நீயும் கணவனிடம் நடந்துகொள் என அறிவுறுத்துகிறாள் மற்றொருத்தி. (300) இளமைக் காலம் ஆற்று நீர் போல் கழியக் கூடியது. துன்பக் கடலை நீந்திக் கரையேறவும் முடியாது, மூழ்கிச் சாகவும் முடியாது. அதனால் அவரோடு கொண்ட ஊடலைத் தவிர் என்று அறிவுரை கூறுகிறாள் மற்றொரு தோழி, (254) தலைவியின் செயல் பகைவருக்குக் களிப்பூட்டுகிறது. சினத்தின் மிகுதி குடும்பப் பெருமையைக் குறைக்கிறது அதனால் அப்பணியில் ஈடுபடாதே என்று புகன்று கடிகிறாள் தோழி ஒருத்தி. (286)

"தலைவனின் பரத்தமை கண்டு, ஊர்த் தலைவன் இறக்கும் தறுவாயில், தலைமகனைப் பார்த்து" என் பெயர் நிலைத்திருக்கும் வகையில் நீ பழிதரத்தக்க செயலைச் செய்யக் கூடாது. புகழ் தரத்தக்க செயலையே செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினார். அதைப்பிறகு தலைவிக்கு நினைவு படுத்தித் தலைவன் பரத்தமை நீக்குதல் உறுதி என மொழிகிறாள் தோழி இக் கூறு சங்க இலக்கியம் நினைக்காத ஒன்று எனலாம். பச்சை மணிக்கல்லை விளித்த தோழி" நீ எள்ளின் அளவாகக் குறைக்கப்படும் வரையிலும் உன் விலை மதிப்பு மிகாது என்று கூறித் தலைவியின் உயர்வைக் காட்டவே துன்புறுதல் நேர்கிறது எனக் கூறுகிறாள் தோழி.

வாயிலை நேர்ந்த தலைவனின் நிலையையும் தமிழ் இலக்கியம் காணாத நிலையில் ஆந்திர இலக்கியம் காட்டுகிறது. சினம் கொண்ட தலைவி தலைவன் வரும் போது எப்படி யெல்லாம் கடிந்து பேச வேண்டும் எப்படி வரவேற்க வேண்டும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஒத்திகை பார்க்கிறாள். தலைவன் வந்த உடனோ எல்லாவற்றையும் மறந்து விடுகிறாள். (304) தலைவன் தலைவியின் ஊடலை நீக்கப், பணிய பணியத் தலைவி விளக்கின் திரியைத் தூண்டித் தூண்டி விடுகிறாள். (320) இக்

காட்சி கண்டு நகைக்கும் தோழி தலைவியின் மாமியார் கூறும் நிலை புதுமையானது.

தலைவனை அணைந்த நிலையில் கிடக்கும் சங்கத் தலைவி விடியலை அறிவிக்க சேவல் கூவியதுடன் துணுக்குற்று, ஆற்றாமையுடன் கோழியைச் சபிக்கிறாள். இவ்விலக்கியத்தில் சேவல் கூவியதும் தலைவன் துணுக்குற்று தலைவியை அணைத்துக் கொள்கிறான். அதைக் கண்ட தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

நீர் இப்போது வேறொருத்தியினை வீட்டில் இல்லை
இது உம் சொந்த வீடு (320)

என்று நயமாகக் கூறுகிறாள் தலைவி.

தங்கள் கலவி உரைகளை எல்லார் முன்னிலையிலும் கூறி விடும் கூண்டுக்கிளியை விட்டு விடும்படி அத்தையிடம் தலைவி வேண்டும் முறை புதியது. (325) சென்றவர் இன்று வருவாரோ செப்பு என்னருமைக் கிளியே என்று இல்லவர் அறிதல் அஞ்சி நாணுடன் பயிற்றும் தமிழக அகநானூற்றுத் தலைவியுடன் ஆந்திர நாட்டு அக நானூற்றுத் தலைவி மாறுகிறாள்.

நெய்தல்

இத்திணையில் மொத்தம் 13 பாடல்களே இடம் பெறுகின்றன. அவலத்தை அவர்கள் பாட விரும்பாமை இதற்குக் காரணமாகலாம். சங்க இலக்கியத்தில் நெய்தல் திணைக்கும் குறிஞ்சித் திணைக்கும் முதல் கரு உரிப் பொருளில் மட்டும் தான் வேறுபாடு காணப்படுகிறது. உரிப் பொருள் மாறுவதில்லை. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்குரிய உரிப்பொருளாக இலக்கணக்காரர்கள் கூற, இலக்கியங்கள் இவ்விதியைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. தொகைப் பாடல்கள் விதி விலக்காக அமைகிறது. தலைவன் தலைவி பிரிவும், தலைவி ஆற்றாமையும் எல்லாத் திணைகளிலும் விரவி வரும் கூற்றாகவும் காணப் படுவதால் எல்லாத்திணைகளிலும் இரங்கல் உரிப் பொருள் விரவியே வருகிறது எனலாம். தலைவியின் மீது அன்பு கொண்ட தலைவன் காதல், பிரிவு ஆற்றாமை, வரைவு விரும்பல் ஆகிய துறைகள் நெய்தலிலும் வருகின்றன. கலித் தொகையில் மட்டும்தான் நெய்தல் திணையில் தலைவனின் பிரிவில் தலைவி இரங்குவதைச் சித்தரிக்கின்றன.

1. சங்க இலக்கியங்கள் காதல் தோல்வியைப் படம் பிடிப்பதில்லை. உலக நடப்பியலில் காணப்படும் இக்கூறு ஆந்திர நாட்டு அக நானூறு தலைவியின் காதல் தோல்வியில் காட்டப்படுகிறது." நானும் அவரும் சந்தித்தோம். அவர் சிரித்தார். நானும் சிரித்தேன். தலைவன் ஏமாற்றிப் போனதால் - இதயமில்லாதவனைக் காதலித்ததால் - என்னைக் காண்போர் அனைவரும் சிரிக்கிறார்கள் என்று தலைவி அழுகிறாள். (357)

2. தன்னைத் தவிர மற்றவர்கள் அந்த ஊரில் தாழ்ந்தவர் கள் இருப்பதால் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று கவலைப் படுகின்றாள் தலைவி ஒருத்தி. அறிவு நிலையில் ஆராய்ந்து தலைவனைத் தேர்ந்தெடுக்காமல் உணர்வு நிலையில் கண்டவளே காதல் கொள்ளும் சங்கத் தலைவியினின்று இத் தலைவி மாறுபடுகிறாள். (360)

3. தலைவன் இறப்பில் தலைவியின் வருத்தம் சுட்டப்படுகிறது.

அ. கணவன் இறந்தவுடன் ஆஞ்சிக் காஞ்சி என்னும் மரபு வழி உடன்கட்டை ஏறல் (351)

ஆ. கணவன் இறந்தவுடன் தொண்டை அடைத்து அழாது நின்ற தலைவியை நோக்கி நீ எப்போது அழப் போகிறாய் எனத் தோழி கேட்டல் (359)

இ. தம் காதல் துணை இறந்த பின்னும் வாழ்பவர் இருந்தாலும் இறந்தவரே என்றும் தலைவி நினைத்தல் (361)

ஈ. வேட்டுவக்கிழவி தன் கணவன் இறந்த நாளைவிட, அந்த வேடனின் நினைவாக கூரத்தின் அடையாளமாக அவள் போற்றி வந்த ஊர் நடுவே இருந்த வில்லை வேறு வேடன் முறித்து விட்டதால் அழுதல்

உ. தலைவனின் வீழ்ச்சிக்குக் காரணம் சுட்டப்படுகிறது. புகழேணியின் கொடுமுடியில் இருக்கும் தலைவன் வீழ்ச்சியடை வதற்குத் தோழி இரண்டு காரணங்களைக் கூறுகிறாள்.

1. எடுத்த செயல் முடியும்முன்பு தன் தகுதியை வெளிப் படுத்துதல். 2 பணி முடிந்ததும் தன் வெற்றியை அறிவித்து விழாக் கொண்டாடுதல் என்பன என்ற தோழியின் கூற்று அனைவரும் மனங் கொள்ளத்தக்கதாகும். (356)

4. மனைவி இறந்த நிலையில் தலைவன் நிலை கூறிய பாடல் ஒன்றுகூட சங்க அக இலக்கியத்தில் இல்லை. தபுதார நிலையை இலக்கியங்கள் கூறினும் இலக்கியங்கள் இல்லை. மனைவி இறந்த பிறகு வயலிலிருந்து வீடு செல்லத் தலைவனுக்கு விருப்பமே இல்லை. வீட்டில் என்ன இருக்கிறது? என்கிறான் அவன். (354)

5. நரைத்துத் திரைத்த மூதாளன் துயரத்தில் தலை தாங்கின நிலையில் காலனைச் சந்திக்க வேண்டி வருமே என்று ஏங்குகிறான். (356)

6. வீடு வீடாகச் சென்று பணியாற்றிக் களைத்துப் போன ஒருத்தி, மூப்பு எய்திய காக்கை இரை தேடமுடியாத வாறு போல ஓரிடத்தில் கிடக்கும் எனக்கு இன்னும் வாழ் நாளும் உடம்பும் எதற்கு? என்று முதியவள் ஒருத்தி கேட்கிறாள். (363)

7. வறுமையானது அறிவாளி பண்பாளர், கொடையாளர் களின் தொடர்பை மட்டும் விரும்பி அவர்களுடன் சேர்கிறது. இழிந்தவர்களின் தொடர்பை வெறுப்பதால் சேரவில்லையோ என வறுமையின் நிலை படம் பிடிக்கப்படுகிறது. (364

8. சங்க இலக்கியப் பாடல்கள் தலைவியின் துயரத்தைச் சுட்டுமே தவிர தோழிக்கு ஒரு குடும்பம் இருந்ததாகவோ, தோழி காதலிப்பதாகவோ, கற்பு வாழ்வு வாழ்ந்ததாகவோ காட்டுவதில்லை. தலைவியின் துன்பத்திற்குத் தோழி துணை யிருப்பாளே தவிர தோழிக்குத் தலைவி துணையிருப்பதாகக் காட்டுவதில்லை. தலைவி தோழியின் உறவை ஒரு பாடல் அழகாகச் சுட்டுகிறது. தலைவியின் வீட்டில் பெரிய விழா வொன்று நடக்கிறது. எங்கும் கோலாகலம். ஆனால் அவ் வீட்டின் தலைவி மட்டும் ஒரு மூலையில் முடங்கியிருக்கிறாள். தோழியின் கணவன் தொலை நாட்டிற்குச் சென்று திரும்பி வராததால் தலைவி வாடிக் கண்ணீர் உகுக்கிறாள். தன் தோழியின் துன்பத்தில் துணையாகிறாள் தலைவி.

ஆந்திர நாட்டு அக நானூற்றில் நெய்தல் பாடல்கள் சங்க இலக்கியப் பாடல்கள் போல வெறும் காதலை மட்டும் குறிக்காது வாழ்க்கையின் பல்வேறு இரங்கற் செய்திகளையும் தெரிவிக்கின்றன.

கைக்கிளை

இத்திணையில் 15 பாடல்கள் இடம் பெறுகின்றன. சங்க இலக்கியம் பெண்மை தன் இயல்புக்கு ஏலாத செயல்களைச் செய்வதாகக் காட்டுவதில்லை. இந் நூலில் நடப்பியல் நிலையில் இச்செயல்கள் காணப்படுகின்றன.

1. தலைவியின் நிறைவேறாத காதல் சுட்டப்படுகின்றது.

அ. சங்க இலக்கியத்தில் 64 பாடல்கள் கைக்கிளைப் பாடல்களாகக் கூறப்படுகின்றன. நெய்தற்கள 56, 57, 58, 100 வினைவலரின் காதலைச் சுட்டுவதால் இப்பாடல்கள் கைக்கிளைப் பாடல்களாகின்றன. ஆந்திர இலக்கியத்தில் தலைவியின் நிறைவேறாத காதல் சுட்டப்படுகிறது.

1. நான் மனத்திரையில் தீட்டிப்பார்த்து
நீண்ட ஆசை ஓவியங்களை
என் நம்பிக்கை என்னும் தூரிகைகளால்
தெளிவாகவும் பொலிவாகவும் வரைந்திருந்தேன்
அந்த அழகிய ஓவியங்களை
என்நம்பிக்கைத் தூரிகைகளாலேயே
ஊழ் என்னும் குழந்தை
மறைவாகச் சிரித்தபடி அழித்து விட்டு
மீண்டும் சிரிக்கிறது (369)

இப்பாடலில் தலைவியின் நிறைவேறாத காதல் ஓவிய மாக்கப் படுகிறது.

ஆ. காமனே மறுபிறவியிலும் உன்னை வழிபடுவேன். என் மேல் எய்த அம்புகளை அவன் மேலும் விடமாட்டாயா என வினவுகிறாள் தலைவி ஒருத்தி (372)

இ. அவன் விரும்பிய அவன் தெருவில் வருவதை அறிந்தும் ஓடிப்பார்த்தும் அவன் கண்ணுக்குத் தெரிய வில்லை என ஆத்திரப்படுதல் (370)

ஈ. இவ்வூர்ப் பெண்கள் பேச்சு அவன் பெயரில் தொடங்கி அவன் பெயரிலேயே முடிவதால் ஏற்படும் கோபம் (368)

உ. ஆயர்களின் குரவைக் கூத்தில் கண்ணின் உருத் தோற்றம் கண்டு அருகிலிருந்தவனின் கன்னத்தில் அடுக்கடுக்காக முத்தமிடல் (368)

என இவ்வாறு தலைவியின் நிறைவேறாத காதல் சுட்டப் படுகிறது.

2. தலைவனின் காதல் நிறைவேறாமையும் சுட்டப் படுகிறது.

அ. ஏழையின் கனவு நிறைவேறாதது போல நீ அவள் மீது பார்வை வீசினாலும் அவள் கனிய வில்லை என நெஞ்சை நோக்கித் தலைவன் கூறல். (367.

ஆ. வயல் வழியாகக் கணவருக்கு உணவு எடுத்துச் செல்லும் மகளிரைக் கண்டு பூட்டிய எருதை நினைவில்லாமல் அவிழ்த்தல். (366)

என இவ்வாறு தலைவனின் காதல் நிறைவேறாமை சுட்டப் படுகிறது.

3. பூக்காரியின் அழகைக் காண விரும்பியோர் வேண்டு மென்றே அவளிடம் வந்து மீண்டும் பூ விலை கேட்கின்றனர் (374)

4. வன்னெஞ்சக் கொடியவன் வழி இடையில் மறித்த போது தலைவி அஞ்ச, உறவினர் வருகையினால் அவன் ஓடிப் போக அதற்காக ஆறுதல் அடைகிறாள் தலைவி. (329) இவ்வாறு ஆந்திர நாட்டு அகநானூற்றின் கைக்கிளைத்திணை சங்க இலக்கியத்தினின்றும் பெரிதும் மாறுபடுகின்றது.

பெருந்திணை

இத்திணையில் 21 பாடல்கள் இடம் பெறுகின்றன. சங்க இலக்கியத்தில் மொத்தம் ஆறு பாடல்கள் இடம் பெறுகின்றன. (142 - 147) சங்க இலக்கியம் உள்ளுங்காலை உயர்ந்ததன் மேற்றே'' என்ற உயர்ந்த நோக்கில் கண்ட இலக்கியம். அதில் கொஞ்சம் மாறுபட்டனவே பெருந்திணையாகக் கருதப்படும். ஆந்திர நாட்டில் இலக்கியத்தில் இப்பகுதி இன்று பிராயிடிசம் என்ற கூறப்படுகின்ற பாலியல் பகுதியைப் போன்ற காணப் படுகிறது.

1. கொழுந்தன் அண்ணியை விரும்புதல். கணவன் இல்லாத நேரத்தில் தகாத பார்வை பார்க்க அவள் உடனே இலக்குவன் ஓவியம் காட்டி அவனைத் திருத்துதல் (380)

2. மாதவிடாய் காலத்தில் பெண் அழகானவளாக நினைத்து ஆயன் விரும்புதல் (383)

3. மனைவி உடன் கட்டை ஏற அதற்குரிய உடையணிந்து நிற்க ஊர்த் தலைவன் அவளின் இளமையையும் அழகையும் உற்றுப் பார்த்தல். (384

4. முரடர்கள் வற்புறுத்திக் கற்பழிக்கும் நிலை கூறல் (399) தேனீக்கள் மாம்பூக்களிலிருந்து எடுத்துச் செல்வது போல தம்மால் கவரப்பட்ட மகளிரை முரடர்கள் நகத்தால் கீறித் துன்புறுத்தித் தலைமேல் தூக்கிச் செல்லல். (399)

5. துறவி மகளிரை விரும்புதல் பிச்சைக்காரன் தலைவியின் அழகைப்பருக, தலைவியும் பிச்சை போட்டவாறு நிலவொளி போன்ற அமைதியான சூழ்நிலை நுகர காக்கைகள் வந்து சோற்றைக் கொத்திச் செல்லல். (382, 385) எனப் பொருந்திணைக் கூறுகள் மாறுபடுகின்றன.

இந்நூலில் மகளிரின் கள்ளக்காதல் பெரிதும் கூறப்படுகிறது.

1. கண்ணனுக்குத் திருமணப்பருவம் வந்தவுடன் ஆய்ச்சியர் தங்கள் உறவை யசோதையிடம் சொல்லாமல் மறைத்தல். (393)

2. ஒழுக்கம் தவறிய பெண் பொன்னேர் கட்டும் போது கை நடுங்குதல். (381)

3. மனைவி கரும்பு இயந்திரம் செப்பம் செய்பனை நோக்கி, உனக்கு காதல் திறமும் தெரியவில்லை. கருப்பஞ் சாறு இல்லாமல் வெல்லக்கட்டி செய்யஇயலுமா எனக் கேட்டல். (386)

4. கள்ளக் காதலனைத் தேடி பெண் நள்ளிரவில் செல்லுதல். ஒரு பெண் பகற்பொழுதில் வீட்டிற்குள் மண்ணை மூடிக் காலால் தரையைத் தடவி மெதுவாக நடந்து பழகுதல். (387, 393).

5. மாமியும் கள்ளக் காதலில் ஒழுகுவதால் மருமகளைக் கேட்க முடியாமை - "மாமி, உன் கூந்தலில் மூங்கில் சருக ஒட்டியிருக்கிறது என்கிறாய். உன் முதுகில் வெண்புழுதி எப்ப வந்தது என்று கேட்க எனக்குத் தெரியாதா என மருமகள் கேட்டல். (381)

6. ஒழுக்கக் கேட்டால் கொங்கை தளர்தல் (394)

7. அவள் வளர்த்த நாய் கள்ளக் காதலன் வந்தால்

வரவேற்கிறது. வாலைக் குழைக்கிறது கணவன் வந்தால் குரைக்கிறது. கடிக்கப் பார்க்கிறது. (391)

8. தன்னைத் தேள் கடித்தது என்று கூறி. கள்ளக் காதலனாகிய மருத்துவன் வீட்டுக்கு இப்பெண் கையைதூக்கிக் கொண்டே செல்லுதல். (398)

9. வேறொருத்தியின் கணவன் அழகில் மயங்குதல். (395, 400)

10 கன்னிப்பெண் கற்பழிந்தாள் என்று பறவை கேலி செய்தல் (389) என்று புதுமையான பல கூறுகள் பெருந் திணைத் துறையில் காணப்படுகின்றன.

நிறைவுரை

நாடுகள் வேறுபடினும், மொழிகள் வேறுபடினும் அடிப்படை உணர்வுகள் ஒன்றே. அம்முறையில் தமிழக அகநானூறாக இருந்தாலும் ஆந்திர நாட்டு அகநானூறாக இருந்தாலும் காதல் துறையைச் சொல்லும் போது அவை இரண்டும் சிறப்பாகவே சொல்கின்றன. ஆனாலும் இடத்துக்கு இடம் பழக்கவழக்கங்களும் மாற்றமடைவதால் இலக்கியங்களிலும் மாறுதல் ஏற்படுவது இயல்பே. அம்முறையில் காதல் உணர்வினால் ஒன்றுபட்ட இரு நாட்டு இலக்கியங்களும், பண்பாட்டு அடிப்படையில் பலமாற்றங்களைப்பெற்றுள்ளன. தமிழகச் சங்க இலக்கியம் குறிக்கோள் இலக்கியம். ஆந்திர இலக்கியம் நடப்பியல் இலக்கியம். அதனால் கூறும் முறையிலும், நிகழ்ச்சியைச் சித்தரிப்பதிலும் இவற்றினிடையே பல மாற்றங்கள் எழுந்துள்ளன. ஆயினும் உணர்வு மயமான சிறந்த இலக்கியம் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் ஆந்திர நாட்டு அகநானூறு அமைந்துள்ளது.

தொல்காப்பியமும் பழந்தமிழ்மொழி வரலாறும்

டாக்டர். மோ. இசரயேல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

6. தொல்காப்பியனார் வேறு என்னும் சொல்லை இருதிணைப் பொதுவினைகளின் பட்டியலில் சேர்த்துள்ளார் (தொ. சொ. 222, 225). ஆனால் சங்க இலக்கியத்திலும் பிற்காலத்திலும் இச்சொல் பெயராகவும் பெயரடையாகவும் ஆட்சிப் பெறுதலைக் காணலாம்.

எ - டு :- வேறு அல்ல (கலி. 62) வேறும் உண்டு
வேறு உணர்ந்து (நற். 42) வேறு பொருள்.

7. தொல்காப்பியனார் உவமையியலில் முப்பத்தெட்டு உவமை உருபுகளைத் தொகுத்து (தொ. பொ. 286,291), அவற்றை வினை, பயன், மெய், உரு என்பனவற்றிற்கு உரியன வாகப் பாகுபடுத்தியுள்ளார். இப்பாகுபாட்டில் உவமை உருபுகள் ஆட்சிபெறுதல் காலப்போக்கில் மாற்றம் அடைந்து விட்டது என்பதை மொழி வழக்கில் காணலாம்.

8. தொல்காப்பியனார் உயர்திணையில் இரண்டாம் வேற்றுமை உருபு ஒழியாது வரும் (தொ. எ 157) என்கின்றார் காலப்போக்கில் இந்நிலையிலும் சிறிது மாற்றம் ஏற்பட்டு உள்ளது.

வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் மன்னன் (நற். 70) இங்கு உயர்திணையில் உருபு மறைந்து உள்ளது

9. முன்னிலையசையாகத் தொல்காப்பியனார் கூறியுள்ள 'மதி' (தொ. சொ. 274) என்னும் இடைச்சொல் சங்க இலக்கியத்தில் படர்க்கையில் வழங்குதலையும் காணலாம்.
எ - டு :- நல்குமதி (திருமுருகு. 295).

10. சங்க இலக்கியத்திலேயே எற்று, எல், மோ, மதி (தொ. சொ. 274) போலும், ஆக, ஆகல், என்பது போன்ற வழக்கு வேறுபாடும், மண், உம், ஒ, தஞ்சம், அம்ம, ஆங்க போன்றவற்றின் பொருள் வேறுபாடும் வரலாற்றுப் போக்கில் ஏற்பட்டுள்ள மொழி வளர்ச்சியைப் புலப்படுத்துவன. சங்க இலக்கியத்தில் தொல்காப்பியத்தில் சொல்லப் பெறாத வேறு பட்ட பொருள் உணர்த்தும் உரிச் சொற்களும் இவண் கருதத் தக்கன.[7]

இ. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

வேறு சில வழக்குகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் ஒரே இயல்பினவாக அமைந்து, பிற்கால மொழியில் மாற்றம் அடைந்துள்ளமையைக் காணலாம்.

1. ஒடு, ஆன் என்னும் உருபுகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் கருவி, உடனிகழ்ச்சி ஆகிய இருபொருள்களை (தொ. சொ. 73, 74, 97) உணர்த்துதலையும், காலப் போக்கில் ஒடு உடனிகழ்ச்சிப் பொருளையும் ஆன் கருவிப் பொருளையும் மட்டும் உணர்த்துதலைக் காணலாம்.

2. தொல்காப்பியம், சங்க இலக்கியம் அடிப்படையில் 'இன்' பெரும்பாலும் ஒப்புப் பொருள் உணர்த்துவதாக அமைகின்றது (தொ. சொ. 77, 78). எனவே ஐந்தாம் வேற்றுமையினைத் தொல்காப்பியம் சிறப்பாக ஒப்புப் பொருள் வேற்றுமையாக கொள்ளக் காலப் போக்கில் அது நீங்கற் பொருள் வேற்றுமையாகச் சிறப்பு பெற்றுவிட்டது.

3. தன்மை ஒருமையில் 'டு' விகுதி (தொ. சொ. 203) அருகியே ஆட்சி பெற்றுள்ளது. வேண்டு (நற். 357, குறு. 321) என்னும் சொல் மட்டும் இவ் விகுதியுடன் அமைதலைக் காணலாம். காலப் போக்கில் இவ்விகுதி வழக்கிறந்து விட்டது.

4 தொல்காப்பியத்தில் சுட்டப்படும் அஃறிணை ஒன்றன் பால் விகுதி 'டு' (தொ சொ. 218) சங்க இலக்கியத்தில் இரண்டு சொற்களில் மட்டும் காணப்படுகிறது.

எ - டு :- மாக்கட்டு (குறு. 159). ஆங்கட்டு (ஐங். 279)
பிற்கால இலக்கியத்தில் இவ்விகுதி காணப்பெறவில்லை.

5. உம்உந் தாகும் இடனுமா ருண்டே (தொ. சொ. 272) என்று கூறுவதன் வாயிலாகத் தொல்காப்பியனார் 'உந்து' என்னும் விகுதியின் வரலாற்றை 'உம்' என்பதோடு தொடர்புடையது என்று காட்டுகிறார். உந்தீற்றுச் சொற்களுக்கும் புறநானூற்றில் மட்டும் சான்றுகள் காணப் படுகின்றன.

எ - டு :- ஒலிக்குந்து (புறம். 137) வழங்குந்து (புறம். 396)
சேர்க்குந்து (புறம். 343)

உந்தீற்றுச் சொற்கள் பிற்கால இலக்கியம் எதிலும் இடம் பெறவில்லை.

6. மேலும் மோ, மதி, மா, சின், இக, இகும் (தொ. சொ. 274) மன்ற (தொ. சொ. 263) போன்ற இடைச் சொற்களைப் பற்றிய செய்திகளுக்கும் தொல்காப்பியமும், சங்க இலக்கியமுமே வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. பிற்கால மொழியில் இவை ஆட்சிபெற்றனவாகத் தெரியவில்லை.

ஈ. புதியன படைத்தல்

தொல்காப்பியத்தில் இலக்கணம் கூறப்பெறாத பல கூறுகள் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றன. இவற்றின் அடிப்படையில் பழந்தமிழ் மொழி தொல்காப்பியனார் காலத்தினின்று படிப்படியே வளர்ச்சி பெற்று சங்க இலக்கிய காலத்திலேயே மாற்றம் அமைந்துள்ளமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.[8]

1. நான், எவ்,[9] கோடி, நால்கு / நால் போன்ற மாற்று வடிவங்கள், செய்யும் / செய்ம் என்னும் வாய்பாட்டு ஏவல் வினைச்சொற்கள் வாரும் (பரி. 14). கொள்ளும் (கலி. 32), வம் (ஐங். 411), உண்ம் (புறம். 178) யாவும் சங்க இலக்கிய காலத்தில் தோன்றியனவே. இவற்றிற்குத் தொல்காப்பிய இலக்கணம் இடம்தரவில்லை.

2. கின்று என்னும் நிகழ்கால இடைநிலையும், அன் என்னும் தன்மை ஒருமை வினைமுற்று விகுதியும் சங்க இலக்கியத்தில்தான் முதன்முதல் ஆட்சிபெற்றுள்ளன.

எ-க :- செய்கின்ற (பரி. 22), அறிகுவன் (புறம். 109)
கூறுவன் (நற். 233), உள்ளினன் (நற். 326)

3. வான், பான், பாக்கு போன்ற வினையெச்ச விகுதிகள், ஆல், ஏல், மல், உம் போன்ற விகுதிகளைப் பெற்ற வினையெச்சங்கள் யாவும் சங்க இலக்கிய காலத்தில்தான் பெருமளவில் ஆட்சிபெறலாயின.

எ-டு :- வருவான் (கலி. 113) காண்பான், (கலி. 97),
என்பாக்கு (திருக்குறள், 136) உண்டால் (கலி. 62),

உண்டேல் (கலி. 38), தீராமல் (கலி. 39),
தோன்றினும் (புறம். 35).

4. தொல்காப்பியனார் 'செய்யும்' என்னும் பெயரெச்ச கிளவிக்கு 'மெய்யொடுங் கெடுமே ஈற்று மிசையுகரம்' என்கின்றார். ஆனால் சங்க இலக்கியத்தில் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றிலும் ஈற்று மிசையுகரம் மெய்யொடுங் கெட்டுள்ளமைக்குச் சான்றுகள் உள.

5. தொல்காப்பியனார் ஆறாம் வேற்றுமைக்கு அது என்னும் உருபை மட்டும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சங்க இலக்கியத்தில் அகரமும் ஆறாம் வேற்றுமை உருபாகச் செயலாற்றுவதுபோல் தோன்றுகின்றது.[10]

எ-டு :- தம (தொ. பொ. 194) அவர (புறம். 15)

இவண் விளக்கப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் தொல்காப்பியம் இன்று நமக்குக் கிடைக்கும் எல்லா இலக்கியங்களுக்கும் முற்பட்டது என்ற கூற வாய்ப்புள்ளது. தொல்காப்பியம் சில இலக்கியங்களுக்குப் பிற்பட்டதாயின், அவ்விலக்கிய மொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் விளக்கி இருத்தல் வேண்டும்; மேலும் அவ்விலக்கிய மொழிக்கு ஒவ்வாத இலக்கணச் செய்திகள் தொல்காப்பியத்தில் இல்லை என்ற நிலைமை அமைதல் வேண்டும். இவ்வடிப்படையில் சங்க இலக்கியத்தின் தனிப்பாடல்கள் ஒரு சிலவேனும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு முன் இயற்றப் பெற்றவை யாக இருந்திருக்கலாம் என்பதில் தவறில்லை. அவற்றின் இலக்கணக்கூறுகள் அனைத்தும் தொல்காப்பிய இலக்கண விளக்கத்திற்குட்பட்டும் மாறுபடாமலும் அமைந்திருக்கும் அடிப்படையில்தான் முடிவுகள் செய்தல் இயலும்.

தொல்காப்பிய இடையியல், உரியியல், உவமையியல், மரபியல் ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் சொற்பொருள், சொல்வழக்கு ஆகியன பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தின் பிற்கால மொழியிலும் இடம் பெறும் சொற்பொருள், வழக்கு ஆகியவற்றோடு ஒப்பிடுங்கால், வரலாற்றுப்போக்கில் மொழி யில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிக் கூடுதல் செய்திகளை அறிந்து கொள்ளுதல் இயலும். சங்க காலத்திலேயே மேலும் சில சொற்கள் வழக்கிறந்துவிட்டமையையும் அறிதல் இயலும். இச்செய்திகளும் பழந்தமிழ் வரலாற்றை அறிதற்குத் துணை செய்யும் எனினும் இவை பற்றிய ஆய்வு இவண் மேற்கொள்ளப் படவில்லை.

குறிப்புக்கள்

1. Meenakshisundaram, T. P., A History of Tamil Language, p. 59.
2. கௌவ = கௌ + அ எனவும், வெளவிய = வெள + இய எனவும் பிரிக்கும்போது ஔகாரம் மொழியிறுதியில் வருதல் காண்க.
3. Shanmugam, S. V., Naccinarkkiniyar's Conception of Phonology, p. 81.
4. இசரயேல், மோ., இலக்கண ஆய்வு - வினைச்சொல், பக். 72-79.
5. இசரயேல், மோ., இடையும் உரியும், பக். 17-23; 132-139.
6. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ஆசிரியர் பயன் படுத்தியுள்ள மக்கள் என்னும் உயர்திணைச்சொல் (தொ. சொ. 1) கள் விகுதி ஏற்றுள்ளது போன்று தோன்றுகின்றது.
7. இசரயேல், மோ., இடையும் உரியும், பக். 17-23; 132-139.
8. Israel, M., The Treatment of Morphology in Tolkappiyam, p. 349.
9. இசரயேல், மோ., இலக்கண ஆய்வு-பெயர்ச்சொல், பக். 56 63.
10. Israel, M. Tolkappiyam Grammar and the language of Purananuru, p. 4.

வீரசோழிய எழுத்திலக்கணக் கோட்பாடு*

பி. பெ. சுயம்பு.

தமிழில் கிடைக்கப் பெற்றுள்ள ஐந்தமிழ் இலக்கண நூற்களுள் காலத்தால் முந்தையது 'வீரசோழியம்' ஆகும். இந்நூலின் பாயிரச் செய்தியும் பாடற் செய்தியும் பதினோராம் நூற்றாண்டைய (1063 - 1070)[1] வீரராசேந்திர சோழன் என்னும் 'வீரசோழன்' பெயரால் பொன்பற்றியின் தலைவன் 'புத்தமித்திரன்' என்பார் இதனை இயற்றினார் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளன.

"...... தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி
மன்புத்த மித்திரனே" (பாயிரம் 1)

"தேமே வியதொங்கற் றேர்வீர
சோழன் றிருப்பெயராற்
பூமே லுரைப்பன் ..." (பாயி 3)

"...... எல்லா வுலகும்
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின்..." (சந்திப்படலம் 7)

1. இயல்பகுப்பு நெறி

வீரசோழியமே உட்பிரிவினைப் 'படலம்' எனக் குறிப்பிடும் முதலாவது ஐந்திலக்கண நூலாகும். எழுத்து, பொருள், யாப்பு, அணி என்னும் நான்கன் இலக்கணம் முறையே சந்திப் படலம், பொருட்படலம், யாப்புப்படலம், அலங்காரப்படலம் என ஒவ்வொரு இயலிலும் சொல்லிலக்கணம் மட்டும் வேற்றுமைப்படலம், உபகாரகப்படலம், தொகைப்படலம், தத்திதப்படலம், தாதுப்படலம், கிரியாபதப்படலம் என்னும் ஆறு இயல்களிலும் விளக்கப் படுகின்றன.

எழுத்திலக்கணத்தின் பகுதிகளான ஒலிப்பியல் (Articulatory Phonetics) ஒலியனியல் (Phonemics) ஒலியன்கள் சொற்களிற் வருமிடம் (Phonatactics) ஆகியன பற்றிய கருத்துக் களும் உருபொலியனியற் (Morphophonemics) கருத்துக்களும் இருபத்தெட்டுப் பாடல்களில் (1-28) சந்திப்படலம் என்னும் ஓரே

* இது 13—2—85 ல் நிகழ்ந்த புதன் வட்ட ஆய்வுக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

இயலில் வீரசோழியத்தில் இடம் பெற்றுள்ளன. சந்திப் படலத்தில் இடம்பெற்றுள்ள இருபத்தெட்டுப் பாடல்களுள் ஒன்று (6), ஐந்து (1-5), இரண்டு (7, 8), இருபது (9-28) ஆகிய எண்ணிக்கை உடைய பாடல்கள் முறையே ஒலிப்பியல், ஒலியனியல், ஒலியன்கள் சொற்களில் வருமிடம், சந்தி என்பன பற்றிய கருத்துக்களைச் கூறுகின்றன. பொருள், யாப்பு, அணி ஆகியவற்றின் இலக்கணத்தையும் தனித்தனியே ஒவ்வொரு இயல்மட்டுமே அமைத்து விளக்கியதனால், எழுத்திலக்கணம் முழுவதையும் ஒரே இயலில் கூறியதனை வீரசோழியம் எழுத்திலக்கணத்திற்கே உரியதாக அமைத்துக் கொண்ட இயல் பகுப்பு நெறி எனக் கூறுதல் இயலாது. எனினும் தொல்காப்பியம் உள்ளிட்ட ஏனைய இலக்கண நூற்கள் எல்லாம் சந்தி பற்றிய கருத்துக்களையே மிகுதியாக விளக்கிய போதிலும், எழுத்திலக்கணம் கூறும் பெரும் பகுதியினைச் 'சந்தி அதிகாரம்' எனச் சந்தியின் பெயரால் சுட்டாமல் 'எழுத்ததிகாரம்' எனச் சுட்டியிருக்கவும், வீர சோழியம் மட்டும் அதனைச் 'சந்திப்படலம்' எனச் சுட்டு வதனைப் பெயரிடுதலில் அது கொண்டுள்ள தனி இயல்பாகக் கொள்ளவியலும். வீரசோழியத்தின் இப்பெயரிடும் இயல்பு கருத்துக்களின் மிகுதி [சந்தி பற்றிய கருத்தே மிகுதியாக உளது] பற்றியதாகக் கொள்ளத் தக்கது.[1]

2 விளக்கநெறி

இந்நூல் செய்திகளை விளக்குவதிலும் சில தனி நெறிகளை மேற்கொண்டுள்ளது; எழுத்துக்களைச் சுட்டாது அவற்றின் நெடுங்கணக்கு முறை (Alphabetical order) எண்ணைச் சுட்டி, மகடூஉ முன்னிலைப்படுத்தி எழுத்து முதலிய ஐந்து இலக்கணத்தையும் கட்டளைக் கலித்துறைகளால் கூறுகின்றது.

> "நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்
> ஏன்ற ஞகாரம தாகும்......" (சந்தி. 15)
> "வீறு மலிவேங் கடங்கும ரிக்கிடை மேவிற்றென்று
> கூறுந் தமிழினுக் கீற்றெழுத் தாமென்பர் கோல்வளையே"
> (சந்தி. 8)

இவ்விரு நெறிகளையும் நேமிநாதம் ஏற்றுள்ளது.

எழுத்திலக்கணச் செய்திகளை வீரசோழியம் ஒலியனியல், ஒலிப்பியல், சொல்லில் ஒலியன் வருதல், சந்தி என்னும் வரிசை முறைப்படி கூறுகின்றது. இம்முறை தொல்காப்பியத்தின்

ஒலியனியல் ('நூன்மரபு'), சொல்லில் ஒலியன் வருதல் ('மொழி மரபு'), ஒலிப்பியல் (பிறப்பியல்') சந்தி (ஏனைய ஆறு இயல்கள்) என்னும் முறையினின்று வேறுபட்டதாகும். தொல்காப்பியம் ஒலியன்களை அறிமுகப்படுத்துவதோடு அவற்றின் மாத்திரை போன்ற இயல்புகளையும் கூறி, அவற்றான் சொல்லாக்கம் பெறுதலைக் குறிப்பிட்டுப் பின்னரே பேச்சொலிகளின் பிறப்பினையும் அவற்றோடு நெருக்கமுடைய சந்தியினையும் விளக்குகின்றது. மேலும் தொல்காப்பியம் சந்தியினை ஆறு இயல்களில் விளக்கியபோதிலும், அவற்றோடு தொடர்புடையதாகக் கருதப்படுகின்ற மெய்ம்மயக்கத்தினையும்-ஒலியன்கள் சொற்களிலும் 'ஒன்றனோடு ஒன்று இணைதற்கு உரியன இவை' என்பதனைச் சுட்டும் வகையில் பட்டியலிடுகின்றது. எனவே தொல்காப்பியம் சந்திவிதிகளை மிகுதியாக விளக்கியதன் வழித் தொடருக்கு இலக்கணம் கூறுவதனையே முக்கியமாகக் கொண்டுள்ளபோதிலும், சொல்லமைப்புக்கும் இலக்கணம் கூறும் நோக்குடையது எனலாம். ஆனால் வீரசோழியம் மெய்கள் மயங்கும் எனச் சுட்டிய போதிலும், அவற்றைத் தொல்காப்பியம், நன்னூல் போன்றவற்றைப் போலப் பட்டியலிட்டுத் தெளிவு செய்யவில்லை. இதனால் வீரசோழியம் தொடருக்கே முக்கியத்துவம் கொடுத்து இலக்கணம் கூறுகின்றது எனலாம். அவ்வாறாயின் சொல்லில் ஒளியன்கள் வருதல், ஒலியனியல் போன்றவற்றையும் தொடரிலக்கணம் கருதியே கூறுகின்றது எனலாம். எழுத்திலக்கணத்தைக் கூறும் வீரசோழியத்தின் இவ்வரிசை முறையினையே பிற்கால இலக்கண நூல்கள் ஏற்றுள்ளன.

மேலும் சந்தி விதிகளைச் கூறுங்கால் நிலைமொழியீறுகளின் நெடுங்கணக்கு முறையின் அடிப்படையிலோ ஒலிமாற்றத்தின் அடிப்படையிலோ ஒழுங்குமுறைப்படுத்திக் கூறுதல் இன்றி, மாறி மாறிச் கூறுதல் இந்நூலின் கண் எழிலூட்டுதற்கு மாறாக அமைந்தவொன்றாகும். சான்றாகப் பதின்மூன்றாம் பாடலில் உடம்படுமெய் வருதலையும் பதினான்கில் ணகர வீற்றோடு தகர நகரங்கள் புணருதல், குற்றொற்றோடு உயிர் புணருதல், யரழ ஒற்றுக்களோடு வல்லொற்றுப் புணருதல் ஆகியவற்றையும் பதினைந்தில் மீண்டும் உயிரீற்றுப் புணர்ச்சியினையும் கூறுதலைக் குறிப்பிடலாம். இப்போக்குச் சந்தியை விளக்குமிடத்துப் பரவலாக உளது.

தொல்காப்பியம் குறில், நெடில் போன்ற ஒருவகை எழுத்தினை அடிப்படையாக வைத்து (1 : 3, 4) அதன் விளக்கம் (Definition), மாத்திரை, எண்ணிக்கை போன்றவற்றைக் கூறுகின்றது, ஆனால் பிற்கால இலக்கண நூற்களில் மாத்திரை போன்ற எழுத்தின் இயல்புகளை அடிப்படையாக வைத்து அவற்றைத் தொகுத்துக் கூறும் நெறி இடம் பெற்றுளது. இதனை வீரசோழியமே தொடங்கி வைத்துள்ளது. சான்றாக அது மாத்திரைகளைத் தொகுத்து ஒரே நூற்பாவில் பட்டியலிடுதலைக் கூறலாம்.

"குற்றெழுத் தொன்றான் றரையாகு மையென இரண்டுநெடில்
ஒற்றெழுத் தாய்தம்இ உஅரை மூன்றள போங்குயிர்மெய்
மற்றெழுத் தன்றுயிர் மாத்திரை யேபெறும்"
(சந்தி 5).

3. தன்கால மொழி உணர்வு

வீரசோழியத்தின் சிறப்பு இயல்புகளுல் தன்கால மொழி உணர்வே தலையாயதாகும். நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம் போன்ற பிற்கால இலக்கண நூற்கள் தம் காலத்து வழங்கிய மொழி வழக்கினுக்கு இலக்கணம் கூறுவதினும், தொல்காப்பியம் போன்ற முற்கால இலக்கண நூற்களின் கருத்தினை ஏற்பதற்கே சிறப்பிடம் கொடுத்துள்ளன. ஆனால் வீரசோழியம் அவற்றினின்று வேறுபட்டுத் தன்காலப் புதிய வழக்குகளை ஏற்றும் இறந்த வழக்குகளை ஒழித்தும் இலக்கணம் கூறுகின்றது.

3 1. நெடுங்கணக்கு முறை

முதலெழுத்துக்கள், குற்றியலிகரம், ஆய்தம் குற்றியலுகரம் என்ற நெடுங் கணக்கு முறையினைத் தொல்காப்பியத்தில் (1:1,2) காண்கின்றோம். இம்முறை வீரசோழியத்தில் வேறுபட்டுள்ளது. மேலும் ஆய்தம் பிற சார்பெழுத்துக்களினின்று தனிமைப்படுத்தப்பட்டு முதலெழுத்துக்களோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. [2]

அறிந்த வெழுத்தம்முன் பன்னிரண் டாவிகளான கம்முன்
பிறந்த பதினெட்டு மெய்நடு வாய்தம்" (சந்தி. 1)

இந்நெடுங்கணக்கு முறையே நேமிநாதம் (1), இலக்கண விளக்கம் (உரை. 8), இக்கால வழக்கு ஆகியவற்றிலும் இடம் பெற்றுள்ளது.

3. 2. ஐகார, ஔகாரக் குறுக்கங்கள்

ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒன்றரை மாத்திரை கூறுதல் (சந்தி. 5), சொல் ஈற்றில் வரும் ஒலியன்கள் (சந்தி. 8), வினாச் சொற்களின் அமைப்பு (சந்தி. 3, 4), உடம்படுமெய் (சந்தி. 13), அண்ணவின மாதல் (சந்தி. 15) போன்றவற்றின் விளக்கமும் வீரசோழியம் மொழி வழக்கினைப் பற்றி இலக்கணம் கூறும் நெறியினுக்குத் தக்க சான்றுகளாகும்.

ஐகாரமும் ஔகாரமும் மொழியின் நெடுங்கணக்கில் நெடில்களாகக் கூறப்பட்ட போதிலும், (முந்தைய இலக்கண நூற்களைப் பின்பற்றி) அவை வழக்கில் குறிலுக்கும் நெடிலுக்கும் இடைப்பட்டனவாக ஒலித்தமையால் வீரசோழியம் அவற்றிற்கு ஒன்றரை மாத்திரை கூறுகின்றது.

3. 3. சொல்லீற்று ஒலியன்கள்

"ஈறும்மகர ணகரங்க டாமும் இடையினத்தி
லேறும் வகர மொழிந்தைம் மீரைந் தெழிலுயிரும்
வீறு மலிவேங் கடங்கும ரிக்கிடை மேவிற்றென்று
கூறுந் தமிழினுக் கீற்றெழுத் தாமென்பர்
கோல்வளையே" (சந்தி. 8)

என்னும் பாடல் 'ன்', 'ம்', 'ண்' என்னும் மூன்று மெல்லினமும் வகரம் ஒழித்த ஐந்து இடையினமும் பத்து உயிர்களும் [எகரமும் ஒகரமும் ஒழிக்கப்பட்டுள்ளன என்பது பெருந்தவேனார் உரை] தமிழ்ச்சொற்கட்குஈற்றில் வரும் எனக் கூறுகின்றது. 'ங்', 'ஞ்', 'வ்' என்பனவும் சொல்லின் ஈற்றில் வரும் எனத் தொல்காப்பியம் கூறியபோதிலும், இவை பிற்கால மொழி வழக்கில் [இலக்கியம், கல்வெட்டுப் போன்றவற்றில்] இடம் பெறுதற்கான சான்றேதும் காணப்படவில்லை. எனினும் நன்னூல் (107), இலக்கண விளக்கம் (28) போன்ற நூற்கள் தொல்காப்பியக் கருத்தினை ஏற்கும் நோக்கில் இவையும் சொல் ஈற்றில் வருதற்கு உரிய எனக் கூறுகின்றன. ஆனால் வீரசோழியத்தில் அத்தகு அணுகுநெறி காணப்படவில்லை.

3.4. வினாச்சொல் அமைப்பு

இந்நூல் வினாச்சொற்களின் முதல் ஒலியனாக 'ஏ', 'யா', 'எ' என்பனவும் ஈற்று ஒலியனாக 'ஆ', 'ஏ', ஓ என்பனவும் அமைதலை "ஏயாஎச் சொன்முன் வினா" (3), "ஆஏஓ வினா வந்தமாம்" (4) எனக் கூறுகின்றது. 'யா', 'எ' என்பவற்றை அடியாகக் கொண்ட 'யாது', 'எவன்' (2:31) என்பன போன்ற வினாச் சொற்கள் தொல்காப்பிய மொழியில் இடம் பெற்றிருந்த போதிலும், 'யா', 'எ' வினாச்சொற்களில் அமைதலையோ வினாவின் முதற்கண் வருவன. ஈற்றில் வருவன எனப் பகுத்துக் கூறுதலையோ தொல்காப்பியம் மேற்கொள்ளவில்லை. ஆனால் வீரசோழியம் வினாச்சொல் அமைப்பினைத் தெளிவாக்கி கூறுவதன்வழி, பிற்கால இலக்கண நூற்கட்கு முன்னோடியாகவும் திகழ்கின்றது.

3.5. உடம்படுமெய்

வீரசோழியம் (சந்தி. 13) 'இ', 'ஈ', 'ஐ' ஆகிய ஈற்றுச் சொற்களோடு உயிர்முதற் சொற்கள் புணரும்காழ் யகரமும் ஏகார ஈற்றுச் சொற்களோடு உயிர் முதற் சொற்கள் புணருங் கால் யகரம் அல்லது வகரமும் ஏனைய ஈற்றுச் சொற்களோடு உயிர் முதற் சொற்கள் புணருங்கால் வகரமும் உடம்படு மெய்யாகத் தோன்றும் எனக் கூறுகின்றது. இவ்வருகையினை இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் (ஆ. வேலுப்பிள்ளை, 1976; 221, 421 - 424) பரவலாகக் காணலாம்.

3.6. அண்ணவினமாதல்

'இ', 'ஈ', 'ஐ' ஆகிய முன்னுயிர் ஈற்றுச் சொற்களோடு நகரமுதற்சொற்கள் புணருங்கால் பல்லொலியாகிய நகரம் அண்ணஒலியாகிய ஞகரமாகத் திரிதலை வீரசோழியம் குறிப் பிடுகின்றது.[3]

"நான்கொடு மூன்றொன்ப தாமுயிரின் பின்பு
நவ்வருமேல்
ஏன்ற ஞகாரம தாகும்." (சந்தி 15)

3. 7. இணைவு

உரசு மருங்கொலியான ழகர வீற்றுச் சொற்களோடு வல்லினத்தையும் மெல்லினத்தையும் முதலாகக் கொண்ட சொற்கள் புணருங்கால் அது முறையே நாமடி வல்லின

மாகவும் (ட்) நாமடி மெல்லினமாகவும் (ண்) திரியும் என்பதை வீரசோழியம் மட்டுமே கூறுகின்றது.

"... பதினைந்தொ டெண்ணிரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரன்
டுந்தொடர்பால்
ஆன்றவைந் தாமுட லாம்முன்பி லொற்றுக்
கழிவுமுண்டே" (சந்தி 15)

"ஐம்மூன்ற தாமுடல் வன்மையின் வந்திடில்
ஆறொடைந்தாம்
மெய்ம்மாண்ப தாம்நவ் வரின்முன்ன ழிந்துபின்
மிக்கணவ்வாம்
மம்மேல் வரினிரு மூன்றா முடல்மற் றியல்சந்தி
தம்மா சகலங் கிடப்பின்க ளாமென்ப தாழ்குழலே"
(சந்தி 18)

'நாடுரி' எனும் வடிவத்தின் அமைப்பிற்கான சந்தியினைக் கூறுமிடத்து, 'நாழி', 'உரி' என்னும் இரு சொற்களின் புணர்ச்சியே 'நாடுரி' என ஆயிற்று என்று தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூற்கள் (தொல். 1 : 240, நேமி. 19, நன். 1 : 174. இ. வி. 79) கூறிய போதிலும், அவை யெல்லாம் ழகரமே டகரமாகத் திரிகின்றது எனக் கூறுதற்குத் தயங்குகின்றன.[4] இத்தகைய ஒலிமாற்றம் பிற்கால வழக்கில் ழகரமும் ளகரமும் வேறுபாடின்றி ளகரமாக ஒலிக்கத் தொடங்கியதன் விளைவாக ஏற்பட்டிருக்கலாம். ழகரம் டகரமாகத் திரிதலை ழகரமும் ளகரமும் ஒலியளவில் நீங்காது இணைந்ததன் (Potential merger) விளைவாக இருக்கலாம் என கோ. விசய வேணுகோபாலும் (1968 : 83) கருதுகின்றார்

4. வடமொழி இலக்கணம்

இந்நூலின் பாயிரம் தமிழ் இலக்கணக் கூறுகள் மட்டுமன்றி வடமொழி இலக்கண மரபினையும் கூறும் பொருட்டே இந்நூல் இயற்றப்பட்டது எனக் குறிப்பிடுகின்றது.

"......... தமிழுரைக்கப்
புக்கவன்" (பாயி. 1)

"நாமே வெழுத்துச்சொ னற்பொருள்
யாப்பலங் காரமெனும்

யாமேவு பஞ்ச வதிகார
மாம்பரப் பைச்சுருக்கித்
தேமே வியதொங்கற் றேர்வீர
சோழன் றிருப்பெயராற்
பூமே லுரைப்பன் வடநூன்
மரபும் புகன்றுகொண்டே" (பாயி. 3.)

சந்தி இலக்கணம் தமிழுக்குக் கூறவந்த வீரசோழியம்,
"ஆன்றா முலோபத்தொ டாகம மாதேச மாரியத்துள்
மூன்றா மொழியொடெழுத்து விகாரம்" (சந்தி. 10)

என வடமொழி விகாரங்களையும், விருத்தி, குணசந்தி (சந்தி 12) களையும் கூறுவதோடு, தமிழ் நெறியினைப் பற்றி உடம்படுமெய் வருதலை விளக்கி, உடம்படுமெய் என்ற சொல்லை ஆளாமல் 'ஆகமம்' என்னும் வடசொல்லால் அவற்றைக் குறிப்பிடுகின்றது.

"மூன்றொடு நான்கொன்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்தினடு
ஆன்ற யகாரம்வந்தாகம மாகும்அல் லாவுயிருக்
கேன்ற வகாரம் எட்டேற்கும் இரண்டும்" (சந்தி. 13)

வடமொழி அறிஞர்கட்குத் தமிழ்மொழியினையும் தமிழ்மொழி அறிஞர்கட்கு வடமொழியினையும் பயிற்றுவிக்கும் பொருட்டு இந் நூல் இயற்றப்பட்டதோ, எனக் கருதுதற்கு இத்தகைய நெறி இடம் கொடுக்கின்றது.[5] சொல்லிணக்கணத்தை விளக்கும்போது 'காரகம்', 'தத்திதம்' 'தாது' என்றாற் போல வடமொழிப் பெயரால் தமிழிலக்கணக் கூறுகளைக் கூறுவதோடு, இரு மொழிகளையும் ஒப்பிட்டு விளக்கும் போக்கு பரவலாக இந்நூலில் இடம் பெற்றிருப்பது, இக் கருது கோளுக்கு மேலும் அரணாக அமைகின்றது மேலும் பிறமொழி பயிலுவோருக்குச் சந்தி போன்ற தொடரமைப்பும் தாது, தத்திதம் போன்ற பகுபதமாகிய சொல்லமைப்பும் முதன்மையாகத் தெரிந்திருத்தல் இன்றியமையாதது என்பதனாலேயே வீரசோழியம் தொல்காப்பியத்தில் இடம் பெறாத பகுபத இலக்கணத்தினையும் (தாதுப்படலம் முதலியன) கூறவேண்டியதாயிற்று எனலாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1.	Tamil Literature —Prof. M. S. Purnalingam Pillai	உரு. 85/— U.S.$ 17
2.	மொழி நூல் —மாகறல் கார்த்திகேய முதலியார்	உரு. 75—
3.	Tamil University Machine Translation System (TUMTS) Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan	Rs. 75/— U.S.$ 15
4.	A Study on the Thanjavur Art Plate —Prof. P. Saravanavel	Rs. 60/— U,S.$ 12
5.	நாமதீப நிகண்டு —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்	உரு. 68—
6.	மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் —பேரா கா. சுப்ரமணியப் பிள்ளை	உரு. 45/—
7.	Indians in South Africa —Prof. K. Nambi Arooran	Rs. 60/— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%

நேரில் 30%

அஞ்சல் செலவு தனி

பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%

விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ 50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6	00
கபிலர் – நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்	ரூ 4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2	00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ. 0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ 6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம் ஏ , பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம் பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

5 भारत INDIA

பெறுநர்

திருமிகு

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
M a d r a s. 600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.